விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 13 வியாழக்கிழமை (29.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

நாட்டை மீட்டெடுக்க

## சகலரும் ஓரணியில் திரள வேண்டும்

### ஐ.தே.க தலைவர் ரணில் அழைப்பு



(கொழும்பு)

**நாட்டை வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீட்டெடுக்க தேசப்பற்றுள்ள அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.**

இணையவழியாக நாட்டு நிலைவரங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

19

## யாழ்.மாவட்டத்தில் 123 பேர் உட்பட வடக்கில் 165 பேர் கோவிட்டால் மரணம்

### வட மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றினால் வடக்கு மாகாணத்தில் 165 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்

19

## யாழில் 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

### இன்று கோவிட் தடுப்பூசி செலுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றைய தினம் 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கோவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்

19

கொரோனாவால்

## மன்னாரில் ஒருவர் மரணம்

(மன்னார்)

மன்னாரில் உயிரிழந்த 37 வயதுடைய

19

## யாழ்.பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

அநுராதபுரத்தை சேர்ந்த சார்ஜன்ட்

19

அரசுக்கு எதிராக நாடுமுழுவதும் போராட்டம்

# ராஜபக்‌ஷவின் குடும்ப ஆட்சி வெகுவிரைவில் கவிழும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

**ராஜபக்ஷ குடும்ப அரசின் அடக்குமுறைகள் அட்டூழியங்களுக்கு எதிராகவே நாடுமுழுவதிலும் ஜனநாயகப் போராட்டங்கள் இடம் பெறுகின்றன.**

**இந்த அரசின் ஆட்சி கவிழும் நாள் வெகுதொலைவில் இல்லை என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், தாதியர்கள்,

19

கொரோனாவால்

## யாழ் - 65 வடக்கு - 78

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 65 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 78 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை

19

## நாட்டில் சில நிகழ்வுகள், உற்சவங்களால் கோவிட் உப கொத்தணிகள் உருவாகும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சில நிகழ்வுகள் மற்றும் உற்சவங்களைக் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமையானது உப கொத்தணிகள் உருவாகுவதற்கு வழி வகுக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற

19

## 3 இலட்சத்தைக் கடந்த கோவிட் தொற்றாளர்கள்

### நேற்றும் +1,919 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நேற்று 3 இலட்சத்தைக் கடந்

19

கொரோனாத் தொற்றால்

## நாட்டில் மேலும் 63 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 63 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட்

19

## மாதகலில் 417 கிலோ கஞ்சா மீட்பு

## யாழில் விபரீத முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

### பரிசோதனையில் கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புவனேந்திரராசா சுகந்தன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

புறா வளர்ப்பில் இளைஞர்களிற்கிடை

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்க்கட்சி கூட்டணியிலிருந்து ரிஷாத் தரப்பினரை நீக்கிவிட்டோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளித்த போதே ரிஷாத் பதியுதீனின் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி கூட்டணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கலில் ஒரு கட்டமாகவே பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மீதான நெருக்கடிகள் அமைந்துள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த உண்மைகளைக் கண்டறியாது இவ்வாறான பழிவாங்கல்களிலேயே அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலமளிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவினை நேற்று புதன்கிழமை குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது அவருடன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சென்றபோது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-03)

# கோவிட் தடுப்பூசி போடாதவர்கள் பொதுப்போக்குவரத்தில் பயணிப்பதற்கு தடை?

(கொழும்பு)

இலங்கையில் கோவிட் தடுப்பூசிபோடாதவர்கள் பொதுப்போக்குவரத்தில் பயணிப்பதில் சிக்கல் நிலை வரலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்ட மக்கள் மாத்திரம் பேருந்துகளில் பயணிக்கக்கூடிய முறை ஒன்றை தயார் செய்யுமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்மூலம் மாகாணங்களுக்கு இடையில் பேருந்துகள் பயணிக்க முடியும் என சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தடுப்பூசிகள் இரண்டை பெற்றுக் கொண்டுள்ள நபர்கள் பேருந்துகளில் பயணிப்பதற்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுக்கொண்ட நபர்களுக்கு பணம் செலுத்தி விரைவில் தற்காலிக அடையாள அட்டை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அந்த அடையாள அட்டைகளை சுகாதார பிரிவு அதிகாரிகளின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் மிகவும் நல்லதென அவர் கூறியுள்ளார்.

அடையாள அட்டைகளை உடனடியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என யோசனை முன்வைப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்போது பயணக்கட்டுப்பாடு இருக்கும்போது அத்தியாவசிய சேவைகள் என்பது பிரச்சினை அல்ல. தடுப்பூசி அடையாள அட்டைகளை காண்பிக்கும் நபர்களுக்கு பேருந்துகளில் பயணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# அஸ்ட்ரா ஜெனெகா கோவிட் தடுப்பூசிகள்

## சனிக்கிழமை இலங்கை வருகின்றது

(கொழும்பு)

இலங்கைக்கு 728,460 அஸ்ட்ரா-ஜெனெகா தடுப்பூசிகள் எதிர்வரும் சனிக்கிழமை வந்துசேரும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் கோவாக்ஸ் தடுப்பூசி நன்கொடைத் திட்டத்தின்கீழ் ஜப்பான் அரசாங்கத்தால் இந்தத் தடுப்பூசி இலங்கைக்கு வழங்கப்படுகிறது.

இந்நிலையில் மேல் மாகாணத்தில் அஸ்ட்ரா -ஜெனெகா முதல் தடுப்பூசி பெற்று நீண்டகாலமாகக் காத்திருக்கும் 490,000 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்தத் தடுப்பூசி இரண்டாம் கட்டமாக வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (ம-03)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் சமூக மருத்துவர் - யாழ். நகர்ப்பகுதி மற்றும் MD (S) யோகா பட்டமேற்படிப்பு மாணவியுமாகிய Dr. Mrs தயாளினி குகேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்.

**ஜீவரெட்ணம் அற்புதராணி**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை

(7483)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 03 1957



இறப்பு 27 07 2021

### செல்வி அம்பிகா செல்லத்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியை – புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அம்பிகா செல்லத்தம்பி நேற்று முன்தினம் (27.07.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் கானசரஸ்வதி, செந்தில்நாதன், செந்தில் ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் இல்லத்தில் நேற்று (28.07.2021) புதன்கிழமை மாலை வைக்கப்பட்டு இன்று (29.07.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(C-2431)

இல. 182, ஸ்ரீ குணானந்த மாவத்தை, கொழும்பு - 13

தகவல்:- குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 08 1970



ஆண்டவன் அடியில் 27 07 2021

### திரு. பூபாலசிங்கம் பகீரதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸிசாகாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. பூபாலசிங்கம் பகீரதன் நேற்று முன்தினம் (27.07.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் குலசிங்கம் (ராசா) - பத்மாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் அஜித்தாவின் அன்புக் கணவரும் துஷ்யா, அக்ஷயா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன், சாந்தினி, சுதாயினி, நவநீதன், லோகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அஜந்தா, மதுராளினி, துவாரகன், மதுராகவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் St. John's Dixie Crematorium, 737 Dundas Street, East Mississauga வில் இன்று (29.07.2021) நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7484)

காளிகோவிலடி, மல்லாகம்.

077 104 1996

தகவல்:- பொ. விமலன் (சித்தப்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவையுடையோர் அதிகரிப்பு;
# டெல்டா எச்சரிக்கையாகவே இதை கருத வேண்டும்

## சன்ன ஜெயசுமன

(கொழும்பு)

**நாட்டில் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் கொவிட் தொற்றாளர்களில் ஒட்சிசன் தேவையுடையோர் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.**



டெல்டா வைரஸ் தொற்று பரவல் தொடர்பான எச்சரிக்கையாகவே நாம் இதைக் கருத வேண்டும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சீனாவிலிருந்து நாட்டை வந்தடைந்த சினோபார்ம் தடுப்பூசிகளைப் பொறுப்பேற்பதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்த வேளை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசிகள் முதற்கட்டமாக வழங்கப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கு குறிப்பிட்டதொரு கால இடைவெளி காணப்படுகிறது. உதாரணமாக சினோபார்ம் தடுப்பூசியை முதற்கட்டமாக பெற்றுக் கொண்டவர்களுக்கு 6 வாரங்களின் பின்னர் இரண்டாம் கட்டத்தடுப்பூசி வழங்கப்படும்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்த குறிப்பிட்ட கால இடைவெளியில் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை முறையாகப் பின்பற்றாவிட்டால் டெல்டா வைரஸ் தொற்றுக்கு கூட உள்ளாகக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் துரதிர்ஷ்டவசமாக ஆசிரியர்கள் பல பகுதிகளிலும் ஒன்றுகூடி பாரிய போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

டெல்டா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய அபாயத்தில் அவர்கள் உள்ளனர். தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் கொவிட் தொற்றாளர்களில் ஒட்சிசன் தேவையுடையோர் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. டெல்டாவைரஸ்தொற்று பரவல் தொடர்பான எச்சரிக்கையாகவே நாம் இதைக் கருத வேண்டும்.

எனவே இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது, அநாவசியமாக ஒன்றுகூடுவது பொருத்தமான செயற்பாடு அல்ல. இது ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் நேரம் அல்ல. நாடு பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது என்பது மறைக்கக் கூடிய விடயமல்ல.

நிலைமையை உணர்ந்து கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முதலில் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். கொவிட் வைரஸ் முற்றாக ஒழிக்கப்பட்டதன் பின்னர் ஏனைய எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## தரம் ஒன்றிற்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிற்கான தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. கபில பெரேரா தெரிவித்தார். (நி-5)

## பாசிக்குடா கடற்கரைக்கு செல்லத்தடை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமான பாசிக்குடா கடற்கரைக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாகவே குறித்த கடற்கரைப் பகுதிக்குள் எவரும் செல்லாத வகையில் தடை போட்டு பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (நி-5)




அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை எதிர்த்து யாழ்., வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக முன்றலிலும் வவுனியா பல்கலைக்கழகம் அமைந்துள்ள பம்பைமடு பகுதியிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(படங்கள்– ரவிசாந், சிவசாந்தன், சதீஸ், கஜிந்தன்)

# வீட்டு வேலைகளில் மாத்திரம் 45 ஆயிரம் சிறுவர்கள்

(கொழும்பு)

8 வயதுக்கு குறைந்த சுமார் 45 ஆயிரம் சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது தொடர்பிலான தகவலை தொழில் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இது, இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஒரு சதவீதமாகும்.

இவர்களில் ஆகக் கூடுதலானவர்கள் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களிலேயே பணியாற்றுகின்றனர்.

தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இலங்கையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள எண்ணிக்கை தொடர்பில் ஓரளவுக்கு திருப்தியடைய முடியும். எனினும், நாடு என்ற வகையில் அதுவும் இருக்கக் கூடாது என தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார். (நி-5)

# நிதி திருத்த சட்டவரைபில் புதிய திருத்தங்கள்

## சட்டமா அதிபர்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் முன்வைத்த நிதி திருத்த சட்டவரைபில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணை நேற்று புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் இதனை அறிவித்துள்ளார். (நி-5)

# சுமார் 5 மணி நேரம் வாக்குமூலம்
# சி.ஐ.டி.யிலிருந்து வெளியேறினார் ஹரின்

(கொழும்பு)

சுமார் 5 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது வெளியிட்ட கருத்து தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி வாக்குமூலம் வழங்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்றுக் காலை முன்னிலையாகியிருந்தார். (நி-5)

# மூன்றாவது தடுப்பூசி தொடர்பில் அவதானம்

## மருத்துவர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

கொவிட்-19 இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 நோய் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோருக்கு ஒட்சிசன் வழங்குவதில் சிக்கல் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோக்கியோ ஒலிம்பிக்

## 11 தங்கங்களுடன் ஜப்பான் முதலிடம்

## அமெரிக்கா இரண்டாமிடம்

## சீனா மூன்றாமிடம்




2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரையான நிலவரத்தின்படி, பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது.

அதன்படி 11 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 20 பதக்கங்களை ஜப்பான் வென்றுள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா 10 தங்கம், 10 வெள்ளி 9 வெணகலம் அடங்கலாக மொத்தம் 29 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

10 தங்கம், 5 வெள்ளி, 8 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 23 பதக்கங்களுடன் சீனா 3 ஆம் இடத்திலும் 7 தங்கம், 8 வெள்ளி, 4 வெண்கலம் அடங்கலாக 19 பதக்கங்களுடன் ரஷ்யா 4 ஆம் இடத்திலும் உள்ளது.

அவுஸ்திரேலியா, பிரித்தானியா, தென்கொரியா, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் முறையே முதல் 10 இடங்களில் உள்ளன. (4-6)

# சிறிய நாட்டுக்கு மகுடம்

## பெர்முடா வீராங்கனைக்கு தங்கம்



இங்கிலாந்து ஆட்சியின் கீழ் வடக்கு அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவு பெர்முடா. அந்த நாட்டில் வசிக்கும் மக் களின் எண்ணிக்கை வெறும் 63 ஆயிரம் பேர். அவர் களில் இருவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதில் ஒருவர் தங்கப்பதக்கத்தை வென்று வியப்பூட்டியுள்ளார். அவரது பெயர்ப்பி புளோரா. பெண்களுக்கான டிரையத்லானில் (நீச்சல், சைக் கிளிங், ஓட்டம் ஆகிய 3 பந்த யங்களை உள்ளடக்கியது). 33 வயதான டப்பி ஒரு மணி 55 நிமிடம் 36 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கப் பதக்கம் வென்றார்.

இதன்மூலம் ஒலிம்பிக்கில் தங்கத்தை ருசித்த குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடு என்ற பெருமையை பெர்முடா பெற்றது.

பெர்முடா ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது இது 2 ஆவது நிகழ்வாகும். இதற்கு முன்பு அந்த நாட்டைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரர் கிளாரென்ஸ் ஹில் 1976 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெண் கலம் வென்றார். (4-6)

# ஒலிம்பிக்கில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பேஸ்போல்கள்



டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டித் தொடரின் பேஸ்போல் போட்டிகளில் பயன்படுத்தப்படும் பேஸ்போல் அனைத்தும் இலங்கையில் தயாரிக்கப்பட்டவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஸ்போல் உற்பத்தி தொடர்பில் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றையும் இட்டுள்ளார். (4-6)

# பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் ஹசரங்க இரண்டாவது இடம்




ஐ.சி.சி.யின் இருபது-20 பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இலங்கை அணியின் வீரர் வனிந்து ஹசரங்க இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இருபது-20 சர்வதேச தொடருக்கான பந்துவீச்சாளர்களுக்கான புதிய தரப் படுத்தலை நேற்று சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டது.

அதன்படி 720 புள்ளிகளுடன் இலங்கை அணியின் வீரர் வனிந்து ஹசரங்க இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

முதலிடத்தில் தென்னாபிரிக்க அணியின் வீரர் தப்ரெஸ் ஷம்ஸி 792 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

முன்னர் இரண்டாவது இடத்தில் இருந்த ஆப்கானிஸ்தான் அணியின் வீரர் ரஷீத் கான் 3 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஹொங்கொங் வீராங்கனையை வீழ்த்தி அடுத்த சுற்றில் பி.வி.சிந்து




இஸ்ரேல் வீராங்கனையை முதல் போட்டியிலும் நேற்று நடைபெற்ற 2 ஆவது போட்டியில் ஹொங்கொங் வீராங்கனையை வீழ்த்தியும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார் பி.வி. சிந்து.

இந்தியாவின் முன்னணி வீராங்கனை பி.வி. சிந்து பெண்களுக்கான பட்மின்டன் போட்டியில் 'ஜே' குரூப்பில் இடம் பிடித்திருந்தார். இந்த குரூப்பில் ஹொங்காங் மற்றும் இஸ்ரேல் வீராங்கனைகளும் இடம் பிடித்திருந்தனர்.

கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் இஸ்ரேல் வீராங்கனையை 2-0 (21-7, 21-10) என வீழ்த்தியிருந்தார். நேற்று ஹொங்கொங் வீராங்கனை நான் யி செங்-கை எதிர்கொண்டார். இந்த போட்டியிலும் பி.வி. சிந்து அபாரமாக செயற்பட்டார். முதல் செட்டை 21-9 எனவும், 2 ஆவது செட்டை 21-16 எனவும் கைப்பற்றி வெற்றி பெற்றார்.

இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று "ஜே" குரூப்பில் முதல் இடம் பிடித்து அடுத்த சுற்றுக்கு பி.வி.சிந்து முன்னேறினார். (4-6)

### ஒலிம்பிக் வரலாற்றில்

# 1,500 மீற்றர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற முதல் பெண்




ஜப்பானின் டோக்கியோ நகரில் ஒலிம்பிக் தொடர் கோலாகலமாக தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க வீராங்கனையான கேட்டி லெடெக்கி, நீச்சல் பிரிவில் ஆண்களுக்கு சவால் அளிக்கும் வகையில் அட்டகாசமாக தனது திறமையை வெளிப் படுத்தி தங்கம் வென்றுள்ளார்.

அவர் பெண்களுக்கான 1500 மீற்றர் ப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இது ஒலிம்பிக் வரலாற்றில் ஒரு பெண் 1500 மீற்றர் ப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் தங்கம் வென்றது முதல் முறையாகும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் அது மாற கருத்ததுவும் மாறிடுமாம்!




**2018**
உள்ளே வாராதே! உறுமித்தான் கடுகடுப்பாய்
வள்ளென்று பாய்ந்திட்டார் வாத்தியார்- வல்லவனும்
பள்ளிக்கு வாராமல் நின்றதனால் பலர் அறிய
எள்ளித்தான் தண்டித்தார் இகழ்ந்து.

கையில் "செல்" போனைக் கண்டதுமே ஆசிரியர்
தைதையெனக் குதித்தார் தணலெனவே- பையனவன்
காதைப்பிடித்துக் கடுகடுத்தார் இனிக் கண்டால்
பாதையிலே போட்டுடைப்பேன் பார்!

முகம் மூடி வந்திட்ட முஸ்லீம் பெண் ஜஸ்மின்னை
அகம் நோக ஆசிரியர் அதட்டித்தான் - செகந்தன்னில்
வகுப்புக்கு வரும்போது வாசலிலே "பர்தாவை"
உகுத்திட்டு வா! என்றார் உறுத்து!

**2021**
பள்ளிக்கு வாராதீர்! பலர் அறிய ஆசிரியர்
சொல்லித்தான் நின்றாராம் சோர்வுடனே - துள்ளித்தான்
வல்லவனும் வியந்தான் முன்வாத்திதனின் மொழி நினைந்து
எள்ளித்தான் நகைத்தானாம் இகழ்ந்து!

ஆசிரியர் சொன்னார் அத்தனை பேர் கைகளிலும்
பேசுகிற "செல்" போனை பேணுங்கள் - நாசமுறும்
சாகும் நோய் வந்ததனால் சரியாமல் நாம் இருக்க
"ஷூம்" அதுவே துணையென்று சொல்லும்.
முகக்கவசம் இன்றித்தான் முன்வந்த ஜஸ்மினையே
அகம் நோகத் திட்டினராம் ஆசிரியர் - சகமதனில்
எல்லோரும் மறவாமல் எப்போதும் முகக்கவசம்
இல்லாமல் வாராதீர் இங்கு!

**முடிவுரை**
காலம் அது மாற கருத்ததுவும் மாறிடுமாம்
ஞாலத்தில் அதை உணர வழி செய்து - மாளத்தான்
பல உயிரும் பறித்திந்த பாரினையே வெருட்டுகிற
கொலை நோயாம் கொரோனா வந்து!

பிழையதனைச் சரியாக்கி பேதமுறச் செய்ததுவாம்
மலையெனவே மனிதகுலம் மருட்டுகிற - கொலைக்கிருமி
கொரோனா என்னும் கோதாரியால் மயங்கி
பாரெல்லாம் பதறிற்றுப் பார்!

எல்லாம் தலைகீழாய் எப்படியோ ஆயிற்று.
பொல்லாத நுண்மியினால் பொலிவிழந்து - வல்லாரும்
வாடித்தான் சோர்ந்தார்கள் வையமதில் பலபேரை
ஓடித்தான் கெடுத்தவர்கள் உணர்ந்து!

# ஹிஸ்புல்லாவிற்கு எதிரான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை

## சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சுமார் 15 மாத காலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் பல தடவைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு அவருக்கெதிரான நம்பத்தகுந்த ஆதாரங்கள் எவையும் தற்போது வரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இவற்றிலிருந்து ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவினால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள்சார் செயற்பாடுகளுக்காகவே அவர் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றார் என்று கருதவேண்டியிருப்பதாக 11 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதாக வழங்கிய வாக்குறுதிக்குப் புறம்பாக, தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு வாய்ப்பளிக்கும் இச்சட்டத்தை இலங்கை தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றமை பெரிதும் விசனமளிப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் அவ்வமைப்புக்கள், அச்சட்டத்தையும் அதன் பயன்பாட்டையும் இலங்கை அரசாங்கம் உடனடியாக மீளாய்விற்கு உட்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தின.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை விரைவாக விடுதலைசெய்யும் அதேவேளை, அச்சட்டத்தை உடனடியாக மீளாய்விற்கு உட்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை, ஆர்டிகல் 19, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசியப்பேரவை, பிரஜைகளின் பங்களிப்பிற்கான உலகளாவிய கூட்டணி, முன்னிலை பாதுகாவலர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் செயற்றிட்டம், சர்வதேச யூரர்கள் ஆணைக்குழு, அனைத்து விதங்களிலுமான அடக்குமுறைகள் மற்றும் இனவாதத்திற்கு எதிரான சர்வதேச முன்முயற்சி, இலங்கையிலுள்ள சர்வதேச செயற்பாட்டாளர்கள், உண்மைக்கும் நீதிக்குமான இலங்கையின் செயற்திட்டம் ஆகிய 11 அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

# பாடசாலை மாணவர்களுக்கு பைசர் செலுத்துவது தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

நாட்டில் உள்ள 18 வயதுக்கு குறைவான பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசியினை செலுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை செலுத்துமாறு கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இந்த விடயம் குறித்து சுகாதாரத்துறையின் விசேட நிபுணர்களுடன் இணைந்து கலந்துரையாடல்கள் முன் னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# விண்ணக வாழ்வின் 45 ஆம் நாள் நினைவு

## அமரர். நவரத்தினம் அன்ரன் ஜெயராஜ்

பிறப்பு: 1985.05.14 இறப்பு: 2021.06.15



கடந்த 14.06.2021 அன்று
இறைவனடி சேர்ந்த எங்கள்
குடும்பத் தலைவர்

**அமரர் நவரத்தினம்
அன்ரன் ஜெயராஜ்**

அவர்களின் இரங்கல் திருப்பலி
இன்று 29.07.2021 மாலை 5.30
மணியளவில் நல்லூர் புனித
ஆசீர்வாதப்பர் ஆலயத்தில்
நடைபெறும்

அன்பினால் எமையெல்லாம் ஆதரித்த
என் கணவர் மறைந்தாலும்- நிதம்
விண்ணவர் அன்பில் நிலைத்திடுவீர்கள்
வானகத் தூதர் புனிதருடன் என்றும்
வாழ்ந்திடும் தகுதி பெற நிகழும்
எம் செபங்களை அஞ்சலி ஆக்குகின்றோம்

பாரதிவீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

பிரிவால் துயருறும்
மனைவி: அன்ரன் ஜெயராஜ் சோபி
மகள்: அ.மெர்சிகா

(7478)

# இரத்தினக்கல் தொகுதியை கொள்வனவு செய்ய 50 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் ஆர்வம்



(கொழும்பு)

இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ள இரத்தினக்கல் தொகுதியை கொள்வனவு செய்வதில் 50 க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். குருந்தம் வகைக்கு உட்பட்ட உலகின் மிகப்பெரிய நீலமணி - இரத்தினக்கல் எனக் கருதப்படும் இரத்தினக்கல் தொகுதி இரத்தினபுரி பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

510 கிலோகிராம் எடை கொண்ட இந்த இரத்தினக்கல் தொகுதி வீடொன்றிற்கு அருகில் கிணறு தோண்டும் போது கிடைத்திருப்பதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை தெரிவித்தது. இதன் பெறுமதி 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகம் என மதிப்பிடப்படுகிறது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று கொவிட் தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம சேவகர் பிரிவு (30 வயதுக்கு மேற்பட்டோர்) | ஊழியர்கள் | |
|---|---|---|---|
| சங்கானை | ஜே/ 158, ஜே/ 167, ஜே/ 177 | கல்விசார் ஊழியர்கள் | யா/ வட்டு.திருநாவுக்கரசு |
| | ஜே/ 175, ஜே/ 176 | ,, | யா/ பண்ணாகம் வடக்கு மெ.மி.த.க.பா |
| சாவகச்சேரி | ஜே/ 300- ஜே/ 319 | | கோல்ட் யூபிலி மண்டபம், சாவகச்சேரி |
| | ஜே/320, ஜே/321, ஜே/337, ஜே/347 | ,, | பிரதேச வைத்தியசாலை, வரணி |
| | ஜே/322-ஜே/336 | ,, | பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம் |
| யாழ்ப்பாணம் | ஜே/61 | ,, | யா/ சென்.ஜோண்ஸ் கல்லூரி |
| | ஜே/81-ஜே/82 | ,, | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி |
| | ஜே/103, ஜே/105 | ,, | நல்லூர் துர்க்கா மணிமண்டபம் |
| காரைநகர் | கிராம சேவகர் பிரிவு முழுவதும் | ,, | MOH அலுவலகம், காரைநகர் |
| கரவெட்டி | கிராம சேவகர் பிரிவு முழுவதும் | ,, | MOH அலுவலகம், கரவெட்டி |
| ஊர்காவற்றுறை | கிராம சேவகர் பிரிவு முழுவதும் | ,, | MOH அலுவலகம், ஊர்காவற்றுறை |
| கோப்பாய் | ஜே/268, ஜே/270 | ,, | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் |
| | ஜே/281, ஜே/282 | ,, | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி |
| | ஜே/273 | ,, | யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி |
| | ஜே/265 | ,, | யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி |
| மருதங்கேணி | ஜே/428 | ,, | பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி |
| | ஜே/433 | ,, | யா/கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை |
| நல்லூர் | ஜே/112, ஜே/113 | ,, வங்கி ஊழியர்கள் | யா/ செங்குந்தா வித்தியாலயம் |
| | ஜே/114 | ,, | யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் |
| | ஜே/116 | ,, | MOH அலுவலகம், நல்லூர் |
| | ஜே/128 | ,, | மஞ்சவனப்பதி கோயில் |
| பருத்தித்துறை | ஜே/403, ஜே/406 | பாடசாலை ஊழியர்கள் | யா/ வட.இந்து மகளிர் கல்லூரி |
| சண்டிலிப்பாய் | சுதுமலை PHI பிரிவு | உயர்கல்வி ஊழியர்கள் | பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய் |
| | மானிப்பாய் PHI பிரிவு | ,, | மானிப்பாய் மெமோரியல் பாடசாலை |
| | ஆனைக்கோட்டை PHI பிரிவு | ,, | யா/ நவாலி மகா வித்தியாலயம் |
| தெல்லிப்பழை | ஜே/242, ஜே/243 | ,, | யா/ வயாவிளான் ம.கல்லூரி (மு.ப.8.00) |
| | ஜே/244, ஜே/ 245 | ,, | யா/ வயாவிளான் ம.கல்லூரி (மு.ப.10.00) |
| | ஜே/252, ஜே/254 | ,, | யா/ வயாவிளான் ம.கல்லூரி (ந.ப.12.00) |
| உடுவில் | ஜே/207 | ,, | புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி |
| | ஜே/201, ஜே202 | ,, | ஏழாலை முத்தமிழ் மன்றம் |
| | ஜே/196 | ,, | MOH அலுவலகம், உடுவில் |
| | ஜே/166, ஜே/187 | ,, | யா/ உடுவில் மகளிர் கல்லூரி |
| | ஜே/188 | ,, | யா/ இணுவில் இந்துக் கல்லூரி |
| | ஜே/193 | ,, | யா/ தாவடி இ.த.க.பாடசாலை |

## 'முந்து தமிழ்' நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகமும் அவுஸ்திரேலிய கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் முந்துதமிழ் எனும் மாதாந்த இயலரங்கின் ஜூலை மாத நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

ஒவ்வொரு மாதமும் நிறைவுச் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு முந்துதமிழ் நிகழ்வு இடம்பெறும்.

Akila Ilngai Kamban Kazhagam Kamban Kazhagam Australia எனும் யூடியூப் முகவரிகளிலும் Kambavarithy Ilankai JeyarajKamban Kazhagam Australia எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்வையிடலாம். (4-5)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தால் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு சுயதொழில் முயற்சி குழுவினரின் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் கண்காட்சியும் விற்பனையும்" நாளை மறுதினம் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை ஆனைக்கோட்டை முதியோர் சங்க முன்றலில் நடைபெறவுள்ளது. (4-5)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கல்வித்தகைமை**

க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்.

இக்கற்கைநெறிக்காகவிண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071455 3696 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். எதிர்வரும் 2021.08.15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மேலும் அறிவித்துள்ளார். (4-5)

# கட்டாக்காலி ஏலவிற்பனை

(கரணவாய்)

கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தின் அதிகார பிரிவிற்குட்பட்ட கரணவாய் வடக்கு கமக்கார அமைப்பு பிரிவில் தொடர்ச்சியாக பயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வந்த கட்டாக்காலி மாடொன்று வெள்ளை நிற பசு மாடு கமக்கார அமைப்பினால் பிடிக்கப்பட்டு அதனை எவரும் உரிமை கோரப்படாத நிலையில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கரணவாய் வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் ஏலமிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-6-60)




# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்றுவரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மராட்சி வேம்பிராய் கான்றைக்கலட்டி அலாக்கிரக பூதவராத விநாயக தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே. கௌரி சங்கரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# 417 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு



(அராலி)

மாதகல் கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 417 கிலோ கிராம் எடையுடைய கேரளக் கஞ்சா நேற்று கடற்படையினரால் மீட்கப்பட்டது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காங்கேசன்துறை கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே குறித்த கஞ்சா பொதிகளை மீட்டனர்.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவுமில்லை என கடற்படையினர் தெரிவித்தனர். (4-5-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள தயக்கம் காட்டும் கர்ப்பிணிகள்

## மகப்பேறியல் நிபுணர் மருத்துவர் பிரதீப்

(கொழும்பு)

கொவிட் தடுப்பூசிகளை நாடும் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கையில் குறைவு காணப்படுவதாக மகப்பேறியல் மற்றும் பெண்நோயியல் நிபுணர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார்.

தடுப்பூசியை பெற்றுக் கொள்வதால் எவ்வித ஆபத்தும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டிருந்தாலும், தடுப்பூசி பெற்றுக்கொள்ள அவர்கள் தயக்கம் காட்டுவது குறித்து கவலைப்படுவதாக மருத்துவர் தெரிவித்தார்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவதில் இதுவரை எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், தடுப்பூசி போடுவதில் கர்ப்பிணிப் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவர் தெரிவித்தார்.

எனவே கர்ப்பிணிப் பெண்கள் தடுப்பூசியை விரைவில் பெறுமாறும் இந்த நேரத்தில் தடுப்பூசியை செலுத்துவது பாதுகாப்பான முடிவு என்றும் மருத்துவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# வீதி விபத்துக்களால் ஒரு நாளில் மட்டும் 10 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் வீதி விபத்துக்கள் காரணமாக நேற்று முன்தினம் 10 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் என்பதுடன், மூன்று பாதசாரிகளும் அடங்குவர்.

இலங்கை பொலிஸாரின் புள்ளிவிபரங்களின்படி நாளாந்தம் வீதி விபத்துக்கள் காரணமாக ஏழு முதல் எட்டு பேர் உயிரிழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)


# சேவை நலன் பாராட்டும் வாழ்த்துக்களும்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினூடு, தெங்குசார் உற்பத்தி செய்யும் பாரிய தொழிற்சாலையாகிய மிரிகமவில் அமைந்திருக்கும் **"சில்வர் மில்"** நிறுவனத்தினரின் நிதியில் விசேடமாக இப்பிரதேச மக்களின் நலன்கருதி 100 குடும்பங்களுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள், உரங்கள், பிள்ளைகளுக்கு உயர்படிப்பிற்கான புலமைப்பரிசில்கள், சிறந்த தென்னை செய்கையாளர்களுக்கான பரிசில்கள் எனப் பல வழிகளில் தன்னலம் கருதாது, பல வருடத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுத்து அயராது பாடுபட்டு எமது உள்ளங்களில் என்றுமே நிலைத்திருக்கும்





## உயர்திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் (JP)

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவிப் பிராந்திய முகாமையாளராக தென்னைப் பயிர்ச் செய்கை சபையில் பளை, யாழ்ப்பாணத்தில் சேவையாற்றியுள்ளார்.

தென்னைப் பயிர்ச்செய்கை சபை, பிராந்தியக் காரியாலயத்தில் மட்டுமல்லாது, பத்தரமுல்லையில் அமைந்திருக்கும் தலைமைக் காரியாலயத்திலும் நன்மதிப்பைப் பெற்ற இவர் 35 வருடகாலசேவை நிறைவு 29. 07.2021 இல் முடிவுற்று பணி ஓய்வு பெறும் வேளையில் இச்சேவை நலன் பாராட்டுக்களையும் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் எமது பிரதேச மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(7479) நன்றியுடன் கூடிய இதயபூர்வமாக வாழ்த்துவோர்:

திரு.திருமதி.த.தட்சணாமூர்த்தி, திரு.திருமதி. தி.சுபாஸ்கரன்

எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, மிருசுவில், கரம்பகம் மக்கள் சார்பாக



# சேவைநலன் பாராட்டுப் பெறும் மணிவிழா நாயகன், நாயகியின் 60ஆவது பிறந்ததின மனப்பூர்வ வாழ்த்துக்கள்

## திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்
## பாரியார் திருமதி.றொஸ்லின் சத்தியேந்திரன்

29.07.2021 அகவை அறுபதில் மக்களின் பாராட்டினைப் பெற்று பணி ஓய்வு பெறும் தென்னைப் பயிர் செய்கைச் சபையில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தவராகவும் உதவிப் பிராந்திய முகாமையாளராகவும் சேவையாற்றிய **திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன் பாரியார் திருமதி றொஸ்லின் சத்தியேந்திரன்** அவர்களையும் வடமாகரண தென்னைச் செய்கையாளர்களின் மனதில் இடம்பிடித்த இவர்கள் 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் பல காலம் சிறப்புடன் வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துவோர்:

திரு.திருமதி. றொபின்சன் பியூலா குடும்பத்தினர்

திரு. சு.ரட்ணகுமார் [ஓய்வு நிலை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்லடி, மட்டக்களப்பு] [7464]

# 60ஆவது பிறந்ததின வாழ்த்தும் சேவைநலன் பாராட்டுப்பெறும் மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்

1986ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை 35 வருடகால சேவையினைப் பூர்த்தி செய்து 29.07.2021 (இன்று) ஓய்வு பெறும் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவிப் பிராந்திய முகாமையாளராகிய

## திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்–J.P
## NDT Agriculture

அவர்கள் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் 1986 ஆண்டு இணைந்து மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 35 வருட காலம் எந்த வேளையிலும் தேவையான தென்னை அபிவிருத்தி தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி தனது மகத்தான பணியினை செய்திருப்பது மட்டுமல்லாமல், சமய, சமூகப் பணிகளையும் செய்து சமூக செய்து சமூக சேவையாளருக்குரிய பல விருதுகளையும் பெற்றார். எம் மக்களிடையே தென்னைகளுக்கு ஏற்படும் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு இவரின் பெயரினையே முன்மொழிவார்கள்.

மேலும் பல ஆண்டுகாலமாக கைதடி, சாவகச்சேரி, கமநலசேவைக் குழுவின் உறுப்பினராக இருந்து மக்களின் தென்னைச் செய்கைக்கு பாரியளவில் உதவினார். எனவே ஓய்வுக் காலத்திலும் ஆலோசனைப் பணி தொடர வேண்டுமென்றும் நீடூழிகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து முழு மனதுடனும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



[7464] வாழ்த்துவோர்:

மட்டுவில் மத்தி, மட்டுவில் நுணாவில் விவசாய சம்மேளனமும் கற்பகதரு சங்கங்களும், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனியார் பேருந்து சேவையாளர்களுடன் முரண்பாடு

# அரச பேருந்து சேவையாளர்கள் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு

(முறிகண்டி)

**அரச பேருந்து சேவையாளர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.**




தனியார் பேருந்து சேவையினருடனான முரண்பாடு காரணமாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக பேருந்துகளை நிறுத்தி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

முழங்காவில் பகுதிக்கான சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்து சேவையினருக்கு இடையில் 3 நாட்களாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றைய தினம் முழங்காவில் பகுதிக்கான அரச பேருந்து சேவையை இடைநிறுத்தி கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படாதவிடத்து, எதிர்வரும் 4 ஆம் திகதிக்குப் பின்னர் கிளிநொச்சி சாலையிலிருந்து சேவைகளை இடைநிறுத்தி தொடர் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என ஊழியர்கள் தெரிவித்தனர். மேலும் குறித்த போராட்டத்தில் அக்கராயன், ஜெயபுரம் ஊடாக முழங்காவில் பகுதிக்கான சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-5-100-316)

## மருத்துவமனை வளாகத்தில் வெடிபொருள் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அபிவிருத்தி பணியின் போது நிலத்தில் புதையுண்ட வெடிபொருள் ஒன்று பணியில் ஈடுபட்ட வர்களால் நேற்று முன்தினம் இனம் காணப்பட்டுள்ளது.



மாவட்ட மருத்துவமனையின் பின்பக்கத்தில் உள்ள வளாகத்தில் வீதி அபிவிருத்திப் பணியின் ஈடுபட்ட போது நிலத்தில் புதையுண்ட நிலையில் மோட்டார் குண்டு ஒன்று இனங்காணப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து முள்ளிய வளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து குறித்த குண்டினை பாதுகாப்பாக அகற்றினர். (4-5-281)

## யானையின் சடலம் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா மடுகந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குள பகுதியில் காயங்களுடன் னாட்முடு யானையின் சடலம் ஒன்று நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

குறித்த கிராமத்தில் வேட்டைக்கு சென்றவர்கள் பயன்படுத்திய வெங்காய வெடி வெடித்ததனாலேயே யானை இறந்துள்ளதாக பிரேத பரிசோதனை மேற்கொண்ட வடக்கு மாகாணத்தின் கால்நடை அறுவைச் சிகிச்சை நிபுணர் பி.கிரிதரன் தெரிவித்தார்.

ஐந்து வயது மதிக்கத்தக்க யானையின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(4-5-299)

## ஆவணி மாத மடுத் திருவிழாவில் வெளி மாவட்டத்தவர்களுக்கு தடை



(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மக்கள் மாத்திரம் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் எனவும், வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அனுமதி இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக மன்னார் மாவட் த்தில் உள்ள மக்கள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-5-285)

## கரைதுறைப்பற்றில் சில கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞ ர்மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளாக இரட்டைவாய்க்கால் சந்தியில் இருந்து சாலை வரையான 13 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாததன் காரணமாக பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை.

இக்கிராமங்களைச் சேர்ந்த சுமார் 450 குடும் பங்கள் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்குச் செல்வதற்கு போக்குவரத்துகள் தடையாகக் காணப்படுகின்றன.

மீன் பிடியில் ஈடுபடுபவர்கள் தமது கடல் உணவுகளை முல்லைத்தீவு நகரிற்கு எடுத்துச் செல்வதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் கூட்டங்களில் தமது கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள் என கடந்த பத்தாண்டுகளாக இப்பகுதி மக்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. போரினால் கடும் பாதிப்பு களை எதிர்கொண்ட குறித்த கிராமங்களை அபிவிருத்தி செய்வது கடந்த பத்தாண்டுகளாக மந்தகதியில் இடம் பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (4-5-350)

## முல்லைத்தீவில் வெளிச்சவீடு அமைப்பதில் இழுபறி நிலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்ச வீடு அமைப்பதில் தொடர்ச்சியாக இழுபறிகள் காணப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்ச வீடு அமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை வெளிச்ச வீடு அமைக்கப்படவில்லை.

இதன் காரணமாக கடலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் இயற்கை சீற்றமான காலங்களில் கரைக்குத் திரும்புவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் நவீன படகு வசதிகள் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களிடம் இல்லாத நிலைமையில் வெளிச்ச வீடு அவசியமானதொன்று எனவும் கடற்றொழிலாளர் தெரிவித்தனர். (4-5-350)

## குடிநீர்த் திட்டத்தை முழுமைப்படுத்துங்கள்
## அக்கராயன் பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் குடிநீர்த் திட்டம் முழுமைப்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது. 2012ஆம் ஆண்டளவில் குறித்த குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அக்கராயன் மத்தி, கொங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்கு ஆகிய பகுதிகளில் மிகக் குறைந்தளவிலான குடும்பங்கள் தற்போது குடிநீரினைப் பெறுகின்ற போதிலும் சமாதானபுரம், அக்கராயன் கிழக்கு மக்கள் குடிநீரினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் ஆறு மாதத்தில் இத்திட்டத்தில் உள்ளடங்குகின்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும் என தெரிவித்துத் தொடங்கப்பட்ட குறித்த குடிநீர்த் திட்டம் தற்போது முழுமையடையாது காணப்படுகின்றது.

எனவே கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இக்குடிநீர்த் திட்டத்தினை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (4-5-350)




றிசாத் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி புதுக்குடியிருப்பு மூங்கிலாறு பிரதேச மக்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். (படம் :-தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

29.07.2021
ஆடி 13, வியாழக்கிழமை
பஞ்சமி காலை 6.06 மணிவரை
உத்திராட்டாதி பிற்பகல் 3.45 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சந்திராஷ்டமம்- மகம், பூரம்

வளவன்


மேஷம்

தொழில் ரீதியான பயணங்களில் முன்னேற்றம் கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


ரிஷபம்

பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொள்வீர்கள்.


மிதுனம்

அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.


கடகம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ரோக பயமுண்டு.


சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வார்த்தையில் நிதானம் தேவை, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.


கன்னி

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பொறுமையால் பெருமை சேரும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


விருச்சிகம்

வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், செய்தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், உறவினர்களிடையே இருந்த மனஸ்தாபங்கள் அகலும்.


மகரம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கும்பம்

எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.


மீனம்

எதிர்பார்த்த காரியமொன்றில் தாமதம் ஏற்படலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

வேலைக்குள் மூழ்கி உன் சிந்தனைக்குச் சமாதி கட்டி விடாதே

# கிளிநொச்சியில் கொரோனா தீவிரம்

# தடுப்பூசியே ஒரே தீர்வு

(முறிகண்டி)

**கொரோனாத் தடுப்பூசியினை 30 வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமல்லாது கடைகளில் பணியாற்றுவோர், சந்தைகளில் பணியாற்றுவோர், போக்குவரத்தில் ஈடுபடுவோர் முக்கியமாக முச்சக்கரவண்டி சாரதிகள் 30 வயதுக்கு குறைவாக இருந்தாலும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதென்பதை மக்கள் அறிந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் மாவட்டத்தில் தற்பொழுது செலுத்தப்படும் கொவிட் தடுப்பூசி தொடர்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பயணம் செய்ய முடியாது வீடுகளில் இருப்போர், நோய் வாய்ப்பட்டிருப்போருக்கு நடமாடும் தடுப்பூசி சேவையை பெற்றுக் கொள்ள தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளோம். 021228 5933 எனும் இலக்கத்திற்கு காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரைக்கும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதனூடாக வீடுகளிற்கு வந்து தடுப்பூசிகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் அச்சமின்றி இந்த பாதுகாப்பான தடுப்பூசியைப் பெற்று மாவட்டத்தில் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் முன்வர வேண்டும். முக்கியமாக தற்பொழுது பாதைகள் திறக்கப்பட்டு மக்கள் நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதென்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். நோய் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என ஒருபோதும் நினைக்கக் கூடாது என மேலும் தெரிவித்தார். (4-5-100)

## வெங்காய அறுவடை யாழில் மும்முரம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தற்போது பரவலாக சிறுபோக வெங்காயச் செய்கை அறுவடை மும்முரமாக இடம்பெற்று வருகிறது. வலிகாமத்தில் இம்முறை வெங்காய விளைச்சல் அமோகமாகவுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4-5-18)

## தாதிய உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(நெளுக்குளம்)

அரசாங்க தாதியர் உத்தியோகத்தர்களால் நாடு பூராகவும் ஒரு மணிநேர பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியாவிலும் முல்லைத்தீவிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "தாதிய உத்தியோகத்தர்களிற்கு கொவிட் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கு, கொரோனா விடுதிகளுக்குரிய வசதிகளை வழங்கு, தாதிய சேவை பதவிநிலை சேவை என சுற்றுநிருபம் வெளியீடு" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

தாதியர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று தெரிவித்த அவர்கள் தமது கோரிக்கைகள் தீர்க்கப்படாவிடில் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (4-5-250-299-281)


(முல்லைத்தீவு)


(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. (படங்கள்:- தேவாநந்தன், சதீஸ், வசந்தரூபன், தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மகாராஷ்டிரா வெள்ளப்பெருக்கு இதுவரை 192 பேர் உயிரிழப்பு



(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 192 ஆக அதிகரித்துள்ளது.

குறித்த மாநிலத்தில் கடந்த இரண்டுவார காலமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல உள்கட்டமைப்பு வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.


குறிப்பாக ராய்காட், ரத்ன கிரி, சிந்துதுர்க், கோலாப்பூர், சாங்கிலி உள்ளிட்ட கிராமங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

அதேநேரம் குறித்த வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 192 ஆக அதிகரித்துள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

அத்துடன் 2 இலட்சத்து 29 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட கிராமங்களில் மிக விரைவாக நிவாரணப் பணிகளைமேற்கொள்ளவேண்டும் எனவும் முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (நி-5)

## கர்நாடக மாநில முதலமைச்சராக பசவராஜ் பொம்மை



(டில்லி)

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக பசவராஜ் பொம்மை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சி சட்டப்பேரவைக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு ஏகமனதாக எட்டப்பட்டுள்ளது.

கர்நாடக முதல்வர் பதவியில் இருந்து எடியூரப்பா விலகிய நிலையில் புதிய முதல்வரை தெரிவு செய்வதற்கான பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பசவராஜ் பொம்மை கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.ஆர். பொம்மையின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வடகொரி...

## மீண்டும் ...

(பியாங்யாவி)

**வட கொரியா மற்றும் ... பதற்ற நிலையைத் த... ஏற்படுத்திக்கொள்வதற்... ஈடுபட்டுள்ளன. இந்த... கொரியாவால் குண்... நாடுகளுக்கு இடையி... மீண்டும் திறக்க இரு ...**

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேற்படுத்தும் நோக்கில் உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வடகொரியா சம்மதித்துள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீர்குலைந்துள்ள இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் தென்கொரிய ஜனாதிபதி

மூல... தலை... இன... வழி... ளப்...

இ... இன... துவ... இன...

## கற்பனை செய்யப்பட்ட எதிரியாக சீனாவை சித்திரிப்பதே விரிசலுக்குக் காரணம்

### அமெரிக்காவுடனான உறவு குறித்து சீனா

(பீஜிங்)

சில அமெரிக்கர்கள் சீனாவை கற்பனை செய்யப்பட்ட எதிரியாக சித்திரிப்பதே, இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் கடுமையான சிரமங்களை எதிர்கொ ள்வதற்கான அடிப்படைக் காரணம் என சீன துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் வெண்டி ஷெர்மன், சீனா சென்றுள்ள நிலையில், இந்த கருத்து வெளிவந்துள்ளது.

வெண்டி ஷெர்மன் அங்கு அமெரிக்கா- சீனா உறவுக்கு பொறுப்பான சீனாவின் துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் மற்றும் வெளியுறவு அமைச்சர் வாங் யி ஆகிய இருவரையும் தனித்தனியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள நிலையில், இது குறித்து சீன துணை வெளியுறவு அமைச்சர் ஸீ பெங் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து ஸீ பெங் கூறுகையில், 'சீனாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், அடக்கவும் ஜனாதிபதி ஜோபிடன் நிர்வாகம் முயற்சிக்கிறது.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் காரணம், சில அமெரிக்கர்கள் சீனாவை கற் பனை செய்யப்பட்ட எதிரியாக சித்திரிப்பதே ஆகும். எனத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோபிடன் பதவியேற்ற 6 மாதத்துக்கு பிறகு அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர் சீனாவுக்குச் சென்று நேரடி பேச்சு வார்த்தை நடத்துவது இதுவே முதல் முறையாகும். (நி-5)



அமெரிக்க ... அமைச்சர் அன்... இரு நாட்கள் பய... முன்தினம் இர... தலைநகர் டில்... தந்திருந்தார். ... கன் அமெரிக்கா... கார அமைச்சர... தன் பின்னர் ... விஜயம் மேற்கொ... முதல் முறையா...

## உத்தரப் பிரதேசத்தில் கோர விபத்து 18 பேர் உயிரிழப்பு; பலர் காயம்

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தின் பராபங்கியில் வேகமாக பயணித்த லொறி - பேருந்து மோதி இடம்பெற்ற விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளது டன், பலர் காயமடைந்துள்ள தாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பராபங்கியில் உள்ள ராம் சனேஹி பொலிஸ் நிலையம் அருகே அயோத்தி-லக்னோ நெடுஞ்சாலையில் நேற்று புதன் கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவ இடத்திலேயே 18 பேர் உயிரிழந்ததுடன், விபத்தில் சிக்கியவர்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

காமடைந்த பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (நி-5)

## ஜேர்மன் இரசாயனத் தள... பாரிய வெடி விப...

(பேர்லின்)

ஜேர்மனியின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இரசாயன தளமொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் இந்த அனர்த்தத்தில் ஐந்து பேர் காணாமல் போயுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் இரசாயனத் தளத்தின் நடத்துநர்கள் உறுதி படுத்தியுள்ளனர்.

வெடி விபத்தினால் குறித்த பகுதியை அண்மித்த குடியிருப்பாளர்களுக்கு வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, பல மணி நேரங்களின் பின்னர் நீக்கப்பட்டது.




நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழ... மணியளவில் லெவர்குசென் நகரில் உள்ள செ... உலுக்கிய வெடிப்பில் குறைந்தது 31 பேர் காயம... இரசாயனத் தள நடத்துநர் தெரிவித்தார்.

பல கிலோமீற்றர் தொலை வில் தென்படும் ... நெடுவரிசையாக வான் நோக்கி நகர்ந்தது. வெடி... இன்னும் கண்ட றியப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ொரியா - தென்கொரியா இடையே

# ் துளிர்விடும் நல்லிணக்க சமிக்ஞை



**ற்றும் தென்கொரியா இடையே நிலவிவரும் யைத் தணித்து மீண்டும் சுமுக உறவுகளை ள்வதற்கான முயற்சிகளில் இரு நாடுகளும் இந்த முயற்சியின் ஒரு அங்கமாக வட குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட இரு இடையிலான தொடர்பாடல் மையத்தை இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.**

டட
ம்
த
ள்
ள்

கு
து
தி

மூன் ஜே-இன் மற்றும் வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் ஆகியோர் இடையே கடந்த ஏப்ரல் முதல் கடித வழித் தொடர்பாடல்கள் மேற்கொள் ளப்பட்டு வந்தன.

இதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத் துவது தொடர்பில் இரு தலைவர்களும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் என தென்கொரிய உயர்மட்ட அதிகாரி ஒருவர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் அணு ஏவுகணைத் திட்டங்களை அடுத்து அந்நாடு மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்து ள்ளது.

இதனால் மிகப் பெரும் பொரு ளாதார நெருக்கடியை வடகொரியா எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வட கொரியா மற்றும் தென்கொரியா இடையிலான சமரசம் வோஷிங் டனுடனான அணு ஆயுத தடை ஒப்பந்தத்துக்கு வழியேற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படு கிறது. (நி-5)

---

அமெரிக்க வெளிவிவகார மைச்சர் அன்டனி பிளிங்கன், நாட்கள் பயணமாக நேற்று ன்தினம் இரவு இந்தியாவின் லைநகர் டில்லிக்கு வருகை திருந்தார். அன்டனி பிளிங் அமெரிக்காவின் வெளிவிவ அமைச்சராக பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கு யம் மேற்கொள்வது இதுவே ல் முறையாகும்.

---

# தளத்தில் விபத்து



ாய்க்கிழமை காலை 9.40 உள்ள செம்பார்க் வளா கத்தை பேர் காயமடைந் தனர் என்று ார்.

தென்படும் கறுப்புப் புகை ஒரு ந்தது. வெடிப்புக் கான காரணம் (நி-5)

---

# 22 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

# 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் உடல் நசுங்கிப் பலி

## அமெரிக்காவில் துயரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்ட புழுதிப் புயலால் சங்கிலித் தொடர் போல நிகழ்ந்த சாலை விபத்தில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் உடல் நசுங்கிப் பரிதா பமாக உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் உட்டா மாகாணம் கனோஸ் நகருக்கு அருகே மிகப்பெரிய நெடுஞ் சாலை உள்ளது. கடந்த ஞாயி ற்றுக்கிழமை மாலை இந்த நெடுஞ்சாலையில் ஏராளமான வாகனங்கள் அணி வகுத்துச் சென்று கொண்டிருந் தன. விடுமுறை நாள் என்ப தால் வழக்கத்தை விடவும் போக்கு வரத்து மிகவும் நெரிசலாக இருந்தது.

இந்நிலையில் அங்கு திடீ ரென பலத்த காற்று வீசியது. அதனை தொடர்ந்து அங்கு புழுதிப் புயல் உருவானது. இத னால் நெடுஞ்சாலையில் வாகன சாரதிகளுக்கு முன்னால் செல் லும் வாகனங்கள் தெரியாமல் போனது.

இதனால் நெடுஞ்சாலையில் வேகமாக வந்த லொறி ஒன்று



முன்னால் சென்ற ஒரு காரின் மீது மோதி நின்றது. இதையடுத்து லொறிக் குப் பின்னால் வந்து கொண்டிருந்த வாக னங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதின.

இப்படி மொத்தம் 22 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி சங்கிலித் தொடர் விபத்து நேரிட்டது. இந்தக் கோர விபத்தில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியாகினர்.

மேலும் 10 பேர் படுகாயம் அடைந் தனர். ஏற்கனவே, கடந்த மாதம் 20 ஆம் திகதி அலபாமா மாகா ணத்தில் புயல் தாக்கியபோது 15 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஏற்பட்ட சங்கிலித் தொடர் விபத்தில் 10 பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் பிரதேச செயலாளர்களாக பெரும்பான்மை இனத்தவரை நியமிக்கத் திட்டம்

(கொழும்பு)

**தமிழர்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் இன விகிதா சாரத்தை குறைக்கும் வகையிலும் சிங்கள குடியேற்றங்களை அதிகரிக்கும் வகையிலும் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.**

வடக்கு-கிழக்கு பிரதேச செயூலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் பதவிகளுக்கு பணியாற்ற விரும்பும் சிங்கள அதிகாரிகளிடம் இருந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதன்படி நிர்வாக சேவையில் உள்ளவர்கள் வடக்கு-கிழக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்ற விரும்பினால் இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தெற்கில் உள்ள சிங்கள அதிகாரிகளை தமிழர் பகுதிகளில் நியமிக்கும் வகையில் இந்த விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக ஏற்கனவே வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன என்ற சிங்கள அதிகாரி நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மாவட்ட அரசாங்க அதிபர் பதவியிலும் சிங்களவர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்ற சர்ச்சையும் உருவாகியுள்ளது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் பதவிகளுக்கு சிங்களவர்களை நியமிக்கவும் இரகசிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-5)

# மேலும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கொண்டு வரப்படவுள்ளதாக பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் 4 முதல் 8 ஆம் திகதிகளுக்கு இடையில் குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சீனாவிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றவுடன், சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 20 இலட்சமாக அதிகரிக்கவுள்ளது.

இவற்றில் சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 27 இலட்சம் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கைக்கு ஒரே தடவையில் கிடைக்கப்பெறும் ஆகக் கூடியளவான தடுப்பூசி தொகை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொத்தலாவல சட்டமூலத்தை ஒன்றிணைந்து தோற்கடிப்போம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் அழைப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்தைத் தோற்கடிப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், புத்திஜீவிகளுடனான கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உத்தேச ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் தொடர்பில் ஆராயும் நோக்கிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் புலமைத்துவ சபை, கல்வித்துறை தொடர்பான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழு உள்ளிட்ட தரப்பினருக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அச்சந்திப்பின்போது மேற்படி சட்டமூலம் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டில் நடைமுறையிலிருக்கும் பல்கலைக்கழகங்கள் தொடர்பான சட்டத்திலும் திருத்தங்களை மேற்கொண்டு, அதன் மூலம் இலவசக்கல்விக் கட்டமைப்பில் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் அதனைத் தோற்கடிப்பதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது.

அதுமாத்திரமன்றி ஜனநாயகத்தன்மை வாய்ந்த சுபீட்சமான நாடொன்றில் காணப்பட வேண்டிய இலவசக்கல்விக் கட்டமைப்பை மென்மேலும் வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு அவசியமான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எமது கட்சி தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2365

**றூபி**


டேய் நாளைக்கு outing போகலாம்டா — நான் வரல



பெற்றோல் நான் போடுறன் — அப்பசரி போலாம்

**கவி நயன்**

அப்பா: ஏன்டா பரீட்சையில மார்க் கம்மியா இருக்கு? நல்லா அடிச்சு உதைச்சாத்தான் சரியா வரும்னு நினைக்கிறன்.



மகன்: ஆமாப்பா நானும் அதையே நினைச்சன். அந்த வாத்தியார் வீடு எனக்கு தெரியும் வாங்க போலாம்.

**தர்ஷன்**

எதிரியை ஒழிக்க முதலில் அவர்களை நமது நண்பர்களாக்குங்கள்...



நம்ம கூட சேர்ந்த பிறகு அவன் உருப்படவா போறான்.

**கேசனா**

எதிர்த்த வீட்டு ஆன்டிக்கு முத்தம் கொடுத்தியே...என்ன சொன்னாங்க?



அப்படியே உங்க அப்பன் புத்தின்னு சொன்னாங்க மம்மி:.

**செல்வி**

பத்தில் ஏழு பேர் மொபைல் பயன்படுத்துகிறார்கள்- செய்தி



மீதி மூனு பேர் சார்ஜ் போட்டு வச்சிருப்பாங்க...

**பாபு**

நீங்க கல்யாணத்துக்கு முன்னாடி எந்தக் கடவுளை கும்பிடுவீங்க...? விநாயகரை



கல்யாணத்திற்கு அப்புறம் அத ஏம்பா கேக்குற... வேண்டாத தெய்வமே இல்லை....!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள் அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிளகாய் இறக்குமதிக்குத் தடை

## அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் மிளகாய் இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

அநுராதபுர பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களுடைய தேவையை நிறைவேற்றுவதற்கான மிளகாயை நாட்டினுள் உற்பத்தி செய்ய விசேட வேலைத் திட்டம் ஒன்றை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)



# இலங்கைப் பிரஜை ஒருவர் தென்கொரியாவில் உயிரிழப்பு

(கொழும்பு)

தென்கொரியாவில் பிளாஸ்ரிக் தொழிற்சாலையொன்றில் தொழில் புரிந்த இலங்கைப் பிரஜையொருவர், தொடர்ந்து 18 மணிநேரம் வேலை செய்த பின்னர் சந்தித்த தொழில் துறை விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கியோங்கி மாகாணத்தின் ஹ்வாசோங்கில் அமைந்துள்ள பிளாஸ்ரிக் உற்பத்தி தொழிற்சாலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக "த கொரியா டைம்ஸ்" தெரிவித்துள்ளது.

ஹுவாசோங் சியோபு பொலிஸ் நிலையத் தகவல்களின்படி,

இலங்கையைச் சேர்ந்த 33 வயதான தொழிலாளி ஜுலை 25 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் எண்ணெய் அழுத்த அழுக்கியில் சிக்கியதன் விளைவாக உயிரிழந்துள்ளார். (நி-5)

# சிறுவர்கள் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்க பொலிஸார் விசேட இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அதனடிப்படையில் கொழும்பில் அல்லது அதனை அண்டிய பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் **011 243 3333** என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறு



பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கையில் 'சினோவக்' பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)

சீனாவின் கொரோனா தடுப்பூசிகளில் ஒன்றான சினோவக் தடுப்பூசியை இரண்டாவது முறை போட்டுக்கொண்ட 6 மாதங்களில், அதன் செயற்றிறன் குறையத்தொடங்கும் என்று சீன ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பூஸ்டர் • எனப்படும் கூடுதலாகப் போட்டுக்கொள்ளப்படும் தடுப்பு மருந்து, அதன் செயற்றிறனை மேம்படுத்தும் என்றும் அவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.




இரண்டாம் தடுப்பூசி போடப்பட்டு ஆறிலிருந்து 8 மாதங்களுக்குள், கூடுதல் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால், நோய் எதிர்ப்புச் சக்தி மூன்று மடங்காகப் பெருகும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட இரத்த மாதிரிகளைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் அந்த விபரங்கள் தெரிய வந்துள்ளன.

இதேவேளை, சினோவக் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அளவறிந்து உண்ணுங்கள்!

இந்த உலகத்தில் சாப்பிடாமல் கஷ்டப்படுகிறவர்களை விட சாப்பிட்டு கஷ்டப்படுகிறவர்கள்தான் அதிகம். அதாவது அதிகமாகச்சாப்பிட்டு அவஸ்தைப்படுகிறவர்கள். ஆயுள்வேதம் என்ன சொல்கிறது தெரியுமா? அளவறிந்து சாப்பிடுங்கள் என்று. அப்படி என்றால் என்ன அர்த்தம்? அந்த அளவு என்பது இரண்டு விடயங்களைப் பொறுத்தது.

ஒரு ஆகாரம் உங்கள் கண் முன்பு இருக்கிறது. உங்கள் கை அதை எடுப்பதற்காகப் போகிறது. அதற்கு முதல் இரண்டு விடயங்களை நீங்கள் யோசிக்க வேண்டும்.

முதல் நம்முடைய செரிமான சக்தி (ஜீரண சக்தி) எவ்வளவு? அடுத்தது... இந்த ஆகாரத்தின் செரிக்கிற சக்தி எவ்வளவு? நம்முடைய உடம்பின் ஜீரண சக்தி எப்படி என்பது நமக்குத்தான் நல்லாத் தெரியும். அது இப்போது சரியாக இருக்கின்ற முடிவுக்கு வந்தாச்சா?

சரி... அடுத்தது இதோ எதிரிலே இருக்கிற ஆகாரம் எளிதானதா? கடினமானதா? என்று முடிவு செய்ய வேண்டும். அதாவது இதை சாப்பிட்டால் லேசாக செரித்து விடுமா இல்லை சிரமப்பட்டுத்தான் செரிக்குமா என்று யோசிக்க வேண்டும்.

இலேசாக செரிக்கின்ற ஆகாரம் எது – செரிக்கிறதிற்கு சிரமப்படுகின்ற ஆகாரம் எது என்பது நமக்கு தெரியும். இப்போது உதாரணத்திற்கு இனிப்புச் சுவையுள்ள உணவுப்பண்டங்கள், நெய்யிலே சமைத்த உணவுவகைகள் அதையெல்லாம் அரைவயிறுக்கு மேலே சாப்பிடக்கூடாது. அதுதான் அதுக்கு அளவு.

இலேசாக செரிக்கின்ற ஆகாரங்களை மனதிலே திருப்தி ஏற்படுகின்ற அளவுக்கு சாப்பிடலாம். அதுதான் அதற்கு அளவு. ஜீரணத்திற்கு இலேசாக உள்ள பொருட்களை முறை தவறி சாப்பிட்டால் கூட அதிகமாக ஏதும் கெடுதல் பண்ணாது. ஆனால் கடினமான உணவு வகைகளை கன்னாபின்னா என்று சாப்பிட்டால் கஷ்டத்தில் கொண்டு வந்து விடும்.

ஆனால் தினமும் உடற்பயிற்சி செய்கின்றவர்கள் இயல்பாகவே அதிக ஜீரண சக்தி உள்ளவர்கள். இவர்களுக்கு இது ஒன்றும் கெடுதல் பண்ணாது. இன்னொரு விடயம்... ஆகாரத்தை அதிகமாக சாப்பிட்டால் தப்பு. குறைவாகச் சாப்பிட்டாலும் தப்பு என்கிறது ஆயுள்வேதம்!

அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் உடம்பிலே வாயு, பித்தம், கபம் இது மூன்றையும் அது அதிகமாகக்கி விட்டுவிடும். அதனால் செரிமான சக்தி குறையும். பல நோய்கள் உண்டாகும்.

குறைவாகச் சாப்பிட்டால் பலம், நிறை வளர்ச்சி, மனம் அறிவு புலன்கள் எல்லாம் பாதிக்கப்படுமாம். முக்கியமான ஆகாரத்தை போதிய அளவிற்கு குறைத்து சாப்பிட்டால் அது எண்பது வகையான வாத நோய்களுக்கு காரணமாகும் என்று சொல்கிறது ஆயுள்வேதம்.

அதனாலே நாம் சாப்பிடுகிற ஆகாரம் அதிகமாகவும் கூடாது. குறையவும் கூடாது. சரி அதை எப்படி நாம் கண்டுபிடிக்கிறது?

அளவோடு சாப்பிடும் போது உடலின் செயற்பாடுகள் ஒழுங்காக இருக்கும். அதாவது நிற்பது, உட்காருவது, தூங்குவது, நடக்கிறது, மூச்சை வெளியிலே விடுகிறது, சிரிக்கிறது, பேசுகிறது எல்லாம் சுலபமாக இருக்கும்.

இதையெல்லாம் நாம் சுகமாக உணர்ந்தால் நாம் சாப்பிடுகிற உணவின் அளவு கூடவோ குறையவோ இல்லை என்பது புரிந்துகொள்ளலாம்.

சாதாரணமாக சில வகையான ஆசாமிகளை நாம் தினமும் பார்க்கலாம். அவர்களெல்லாம் உட்காருவது ஒரு சாதனை, எழுந்திருக்கிறது அதைவிட பெரிய சாதனை நடக்கிறது, அதை விட பெரிய சாதனை சிரிக்கிறபோது கூட உடம்பு சிரமப்படும்.

இவர்கள் ஆகார விடயத்தில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்! ஒரு கல்யாணத்திற்கு போயிருந்தேன். சேர்.. அருமையான சாப்பாடு... விலாப்புடைக்க சாப்பிட்டுவிட்டு வந்தேன் என்று பெருமையாக சில பேர் சொல்வது உண்டு. அதெல்லாம் ரொம்பத் தப்பு.

அப்படியெல்லாம் செய்யக்கூடாது! மூச்சுமுட்ட சாப்பிட்டேன் என்று சில பேர் சொல்லுவார்கள். அதுவும் தப்பு. சாப்பிடுவதனாலே நம்முடைய வயிற்றிலுள்ள செரிமான உறுப்புகள் கெட்டுவிடக்கூடாது.

அதனாலே கை சாப்பாட்டுக்கிட்டே போகும் போதெல்லாம் கவனமாக இருக் வேண்டும். இவ்வளவும் ஆயுள்வேத மருத்துவம் சொல்கிற ஆலோசனைகள்.

நம்முடைய ஊரிலே ஒரு கல்யாண விருந்து நடந்து கொண்டிருக்கிறது. பந்தியில் உட்கார்ந்து மும்மரமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார் ஒருத்தர்.

பரிமாறிக்கொண்டு வந்தவர்... "சேர் இதற்கு முந்தின பந்தியிலேயே நீங்கள் சாப்பிட்டதை நான் பார்த்தேன்" என்றார்.

அதற்கு இவர் "உங்களுக்கு ஞாபக சக்தி அதிகம், எனக்கு ஜீரண சக்தி அதிகம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

39

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அத்துடன் (அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படுமிடத்து, அல்லது (ஆ) ஒரு மாகாண சபையோ அல்லது பல மாகாண சபைகளோ திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படாதவிடத்து அத்தகைய சட்டமூலமானது 82 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தபட்ட விசேட (2/3) பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படும்.

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(3)**- மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பிலான எதுவும் இருப்பின், அத்தகைய சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிட்ட பின்னரும் பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடப்படும் முன்னரும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அச்சட்டமூலம் மீதான மாகாண சபை ஒவ்வொன்றினதும் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஜனாதிபதியினால் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலேயொழிய சட்டமாக வருதல் ஆகாது. அத்துடன் (அ) அத்தகைய ஒவ்வொரு சபையும் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படுமிடத்து, அல்லது (ஆ) ஒரு மாகாண சபையோ அல்லது பல மாகாண சபைகளோ திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படாதவிடத்து அத்தகைய சட்டமூலமானது 82 ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட விசேட (2/3) பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படும்.

ஆயின், அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் மீது, எல்லா மாகாண சபைகளுமல்லாத ஒரு சில மாகாண சபைகள் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு உடன்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டமூலமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படுவதன் மேல் சட்டமூலத்திற்கு உடன்படும் மாகாண சபைகள் எம் மாகாணங்களுக்கென தாபிக்கப்பட்டிருக்கின்றவோ அம் மாகாணங்களுக்கு மட்டும் ஏற்புடையதான சட்டமாக வருதல் வேண்டும்.

> **ஒரு சட்ட மூலத்தை ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் நிறைவேற்றுவதற்கு இணங்காது போயின் பாராளுமன்றமானது எல்லா மாகாணங்களிலும் செல்லுபடியான சட்டம் ஆக்குவதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. அச்சட்டமானது மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அன்றி குறைந்த பெரும்பான்மையாலேயே நிறைவேற்றப்படக் கூடியதாக இருந்தால் அதற்கு சம்மதம் அளித்த மாகாணங்களில் மாத்திரமே அச்சட்டம் பிரயோகிக்கப்படக் கூடியதாக இருக்கும்.**

**13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை G154 (3) சம்பந்தமான உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கள் சில**

அரசியலமைப்பின் உறுப்புரை 154G(3) இன் நடைமுறைத்தேவைகளுக்கு முதலில் இணங்காமல், அத்தகைய மசோதாக்களை பாராளுமன்றத்தின் ஆணைக் குறிப்பில் (**Order Paper of Parliament**) வைக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

- 2003 இல் சமர்ப்பிக்கப்பட்ட "நீர் சேவைகள் சீர்திருத்த மசோதா" - "Water Services Reform Bill"
- 2010 இல் சமர்ப்பிக்கப்பட்ட "உள்ளூராட்சி சபைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) மசோதா" "Local Authorities (Special Provisions)"
- 2011 இல் சமர்ப்பிக்கப்பட்ட "நகர மற்றும் கிராமிய திட்டமிடல் மசோதா" - "Town & Country Planning Bill"

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் இம் மசோதாக்கள் பாராளுமன்றத்தின் ஆணைக் குறிப்பிலிருந்து மீளப்பெறப்பட்டன.

அரச காணி சம்பந்தமான ஒரு வழக்கினையும் தற்போது பார்ப்போம்.

**அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்ட மசோதா - உயர் நீதி மன்ற தீர்ப்பு.**

அரசாங்கம், குடிமக்கள் வைத்திருக்கும் அரச காணியின் முழு உரிமையையும், அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பான சகலதையும் அவர்களுக்கு வழங்க தேவையான ஏற்பாடுகளை நிறைவேற்ற அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்ட மசோதா, பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சபையின் ஒப்புதலைக் கோரியது.

பிவிதுரு ஹெல உறுமய கட்சித் தலைவர் உதய கம்மன்பில உட்பட நால்வர் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரச காணி (விசேட ஏற்பாடுகள்) மசோதாவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார், வரைவு மசோதாவின் பின்னணியில் உள்ள நோக்கம் ஒரு சிறப்பு அமெரிக்க பொருளாதார திறந்த வெளி (**US economic corridor**) அமைக்கப்படுவதற்கு நிலங்களை ஒதுக்குவதே எனக் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் தனது மனுவில், "அரச காணி (சிறப்பு ஏற்பாடுகள்)" என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி வர்த்தமானி செய்யப்பட்டு, ஜூலை 28, 2019 அன்று பாராளுமன்றத்தில் மசோதா சமர்ப்பிக்கப்பட்டது.

மனுதாரர், பூர்வாங்க ஆட்சேபனை மூலம் தெரிந்தது என்னவென்றால் இந்த மசோதா அரசியலமைப்பின் 9 ஆவது அட்டவணையின் நிரல் I (மாகாண சபை நிரல்) இன் 18 ஆவது உறுப்புரைப் படி மாகாண சபைக்கு உட்பட்ட ஒரு விடயமாகும்.

ஆனால் இம் மசோதா எந்தவொரு மாகாண சபைக்கும் சமர்ப்பிக்கப்படாமல் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தின் உறுப்புரை 154G(3) ன் படி, ஜனாதிபதி மசோதாவை வர்த்தமானியில் வெளியிட்ட பின்னும், அது பாராளுமன்றத்தின் ஆணைப் பத்திரத்தில் வைக்கப்படுவதற்கு முன்பும், ஒவ்வொரு மாகாண சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு அம் மாகாண சபைகளின் ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும் என்றும் ஆனால் அது நடைபெறவில்லை ன்றும் இது அரசியல் அமைப்புக்கு முரணானதென்றும் மனுதாரர் குறிப்பிட்டார்.

- மேலும் மசோதாவின் சில பிரிவுகளை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கு மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்று தீர்ப்பளிக்க மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை வேண்டி நின்றனர்.

இந்த மனு நீதிபதிகள் புவனேகா அலுவிஹரே, பிரசன்னா ஜெயவர்தன மற்றும் எல்,ரீ.பி. தெஹிதேனியா ஆகிய மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது.

இந்த மசோதா காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அளிப்பு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அல்லது விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட அரச காணிச் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி நிர்ணய தீர்வுத் திட்டத்தின் மூலம் அல்லது குடியேற்றத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட காணிகள் ஆகியவற்றிற்கு அக்காணிகளின் முழு உரிமையையும், அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பான சகலதையும் அவர்களுக்கு வழங்க தேவையான ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிபர், ஆசிரியர்கள் ஏற்பாட்டில் யாழில் நேற்றுப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள், அதிபர்களால் நேற்றைய தினம் யாழ். மத்திய பேருந்து நிலை யத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட் டது. 24 வருட ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டுக்கு உடனடியாக தீர்வு வழுங்கு, இலவச கல் வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்ட மூலத்தை உடனடியாக நீக்கு, ஆசிரியர், மாண வர், பெற்றோர்களை துன்புறுத்துகிற கல்வி நெருக்கடிக்கு உடனடி தீர்வினை வழுங்கு ஆகிய மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடுபூராகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்ட த்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ்.மாவட்டத்திலும் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


(4-5-33-18-104)

## நகர சபை உறுப்பினர் பதவி விலகல்

(சாவகச்சேரி)


நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஜெயக்காந்தன் நகரசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகியுள்ளார். இது தொடர்பாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் சாவகச் சேரி நகரசபைத் தவிசாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளார். (4-5-30)

யா/போக்கட்டி அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு நேற்று புதன்கிழமை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் 1999 ஆம் ஆண்டு உயர்தர மாணவர் அணியினரால் கற்றல் விருத்திக் கையேடு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சுபேசன்)





யாழ்ப்பாணம் - வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை உரத்தினை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)



யாழ்.மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் இடம் பெற்றது. (படம்: சுபேசன்)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### சுக வாழ்வு அருளும் குருவாரம்



வசிஷ்ட முனிவர் ஆசிரமம் அமைத்து சிவனை பூஜித்ததால் வசிஷ்டேஸ்வரர் எனப்பெயர் பெற்றார். அம்பாள் நாமம் உலக நாயகி.

குரு பகவானை வசிஷ்ட மகரிஷி ராஜ குருவாக வழிபட்டதால் இத் தலம் குரு பகவான் தலமாக உள்ளது. இங்கு வேண்டிக்கொள்ள குரு தோஷம் நீங்கும். கல்வி செல்வங்களில் சிறக்கலாம்.

குரு பகவானுக்கு திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் கோவிலில் தனி சந்நிதி அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற இத்திருத்தலத்தில் ஆண்டு தோறும் குருப்பெயர்ச்சி விழா விமரிசையாக கொண்டாடப்படும். இங்கு வந்து வணங்கி வழிபட்டு நலம் பெறலாம்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவது படை வீடான திருச்செந்தூர் குரு தலமாகும். அங்கு அவசியம் சென்று தரிசிக்க வேண்டும்.

கும்பகோணம் மகாமக பொற்றாமரைக் குளத்தின் வடக்கே சோமேஸ்வரர் கோவில் உள்ளது. குரு பகவான் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்றாகும். இங்குள்ள காசி விஸ்வநாதர், விசாலாட்சியை வணங்கி நலம்பெறலாம்.

குருபகவான் தன்னை வழிபடுபவர்களுக்கு, உயர் பதவி, புத்திரப் பேறு, நிறைவான செல்வம் போன்றவற்றை அருள்பவர். அதோடு, கல்லீரல், காது, இடுப்புகளில் ஏற்படும் நோய்களுக்கு இவரை வேண்டினால் தீர்வு கிடைக்கும். வியாழக்கிழமை விரதம் இருந்து நெய் தீபம் ஏற்றி குருவிற்குரிய வஸ்திரம் சாத்தி, தானியம் வைத்து வழிபட்டால் நன்மைகள் நம்மை நாடி வரும்.

(தொடரும்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 180 | 200 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 180 | 180 | 180 | 200 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 70 | 80 | 100 |
| புடோல் | 80 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 270 | 320 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 100 | 140 | 100 | 100 |
| லீக்ஸ் | 180 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 140 | 130 | 140 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 200 |
| போஞ்சி | 250 | 200 | — | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | — | — | 280 | — |
| வெங்காயப்பூ | 180 | 160 | 260 | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 30 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 40-50 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சீலனின் தந்திரம்



"என் பெயர் சக்தி. என் முன்னோர்கள்ஜமீன் தாரர்கள். எங்களுக்குச் சொந்தமான அபூர்வ ஓவியம் ஒன்றைத் தங்களுக்கு விற்க எடுத்து வந்துள்ளேன்," எனக் கூறித் தான் கொண்டு வந்த ஓவியத்தை அவனிடம் காட்டினான்.

அந்த ஓவியத்தைக் கண்டு சீலன் பிரமித்தான். ஒரு தாய் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவது போன்ற படம் அது.

குழந்தைதன்பொக்கை வாயை விரித்து சிரிப்பது மிக அழகாக தீட்டப்பட்டிருந்தது. வர்ணங்கள் கண்களுக்கு குளிர்ச்சி தரும் விதமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"இது கற்பனையில் தோன்றிய படமாக இல்லை. நேரில் நடப்பதை பார்த்து இதனை வரைந்திருக்கிறார் ஓவியர். என்ன நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டான்.

"நீங்கள் நினைத்தது சரியே. அந்த ஓவியத்தில் உள்ள பெண்மணி என்தாய். அந்தக்குழந்தை நானே. இதனை வரைந்த ஓவியனுக்கு என் தந்தை நூறு ஏக்கர் நிலம் பரிசாக அளித்தார்.

ஆனால், இப்போதோ நான் அந்த ஓவியத்தை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்" என்றான்.

"இந்த ஓவியத்திற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். நீயே இதன் விலையைச் சொல்," என்றான் சீலன்.

"எனக்கு இதற்காக நூறு பவுன்கள் கொடுத்தால் போதும். அதைக் கொண்டு நான் முன்னுக்கு வந்துவிடுவேன்," என்றான்.


"இவ்வளவு குறைவாகக் கேட்கிறாயே..." என்று கேட்டார் சீலன்.

"அதற்கு மேல் நான் கேட்கமாட்டேன்!" என்றான் சக்தி.

நூறு பவுண்களைக் கொடுத்து அனுப்பினான் சீலன். (தொடரும்)

# மகாபாரதம்

139



துறவுக் கோலத்தில் இருப்பவரும் உணவுக்காக இல்லறத்தாரை சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. துறந்தோர் என்பவர் முற்றும் துறந்தவராய் இருக்க வேண்டும். சிலவற்றை துறக்க மறந்தவராய் இருக்கக் கூடாது.

எனவே முழுத் துறவு தான் துறவிகளின் இலக்கணம். தலையை மொட்டையடித்து, காஷாயம் பூண்டு, சில நூல்களை கையில் ஏந்தி, திரிதண்டம், கமண்டலம் தாங்கி இருப்பது துறவாகாது.

இத்தகைய போலித் துறவைத் துறந்து இல்லறத்தில்நாட்டம்கொள்வீர். எவன் ஒருவன் ஆசையுள்ளவன் போல் காணப்பட்டாலும் ஆசை யற்றவனாக இருக்கின்றானோ, பகைவரிடத்தும் நண்பரிடத்தும் சமமாக நடந்து கொள்கின்றானோ அவனே உண்மைத் துறவி ஆவான்.

அவனே உண்மையில் முக்தி மார்க்கத்தில் செல்பவன். இத்தகைய மன நிலையைப் பெற்று இல்லறத்திலே இருந்து கொண்டு ராஜரிஷி போல் வாழ்ந்து உண்மைத் துறவிகளைப் போற்றி மனத்தை வெல்வீராக" என்று ஜனகரின் மனைவி கூறினாள்.

எனவே நீங்களும் உங்களது விவேகமற்ற மன நிலையிலிருந்து விடுபட்டு உயிரினங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

சான்றோரையும் தவத்தோரையும் வழிபட்டு உலகை நன்முறையில் காப்பீராக. நற்கதி பெற இதுவே நன்னெறி ஆகும்" என்றான் அருச்சுனன் தருமரை நோக்கி.

அருச்சுனனின் சொல் கேட்ட தருமர் அவனுக்கு தன் வைராக்கியத்தை புலப்படுத்தச் சொல்கிறார்.

"தம்பி பல கோணங்களில் பார்க்கையில் சாத்திரங்கள் முரண்பட்டதாய் தோன்றும்.

ஆயினும் துறவறத்தின் மேன்மையை, உண்மைத் தன்மையை நான் அறிவேன். நீ சாத்திரத்தை மேற்போக்காக படித்தவன்.

அதனை ஆழ்ந்து நோக்காதவன். உண்மையான சாத்திர ஞானம் உள்ளவன் உன்னைப் போல பேச மாட்டான். உடன்பிறப்பே இந்த அளவாவது நீ சாத்திரத்தை அறிந்திருப்பது கண்டு மகிழ்ச்சி. நீ ஒரு போர் வீரன். உனக்கு இணையாக போர் புரிபவன் உலகில் யாரும் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான சாதனைகள் அனைத்தும் முடியும், நடக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எடுத்து வைக்கப்பட்ட முதல் அடியிலிருந்துதான் ஆரம்பமாகின்றன. – அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## வேலணை நகர கட்டுமானத்தை திட்டமிட்டு அமையுங்கள்

தீவகத்துக்கு ஒரு தலைநகரைத் தெரிவு செய்யுங்கள் என்று அறிவிக்கப்பட்டால், அதற்கான பதில் வேலணை என்பதாகவே இருக்கும்.

இதை நாம் கூறும்போது, ஊர்காவற்றுறை என்னவாம் என்று கேட்பவர்களும் இருக்கவே செய்வர்.

அவர்களின் கேள்வியில் நியாயங்கள் உண்டாயினும் அது பழைய நகரம் என்று கூறுவதோடு அதன் தனித்துவம் பேணப்பட, வேலணை; தீவகத்தின் புதிய நகரமாகக் கட்டமைக்கப்படுவதே பொருத்துடையதாகும்.

அந்தவகையில் வேலணை வங்களா வடிச் சந்தி, நகரத்துக்கான அமைவிடமாக இருப்பதை எவரும் நிராகரிக்கமாட்டார்கள்.

வேலணை பிரதேச செயலகம், பிரதேச சபை, வலயக் கல்வித் திணைக்களம், வைத்தியசாலை, ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயம், இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகம், கமத்தொழில் திணைக்களம், கால்நடை வைத்தியசாலை, வேலணை மத்திய கல்லூரி, வங்கி அலுவலகங்கள், தபாலகம் என அரச நிர்வாகத் துறைகள் அமைந்துள்ளதான வேலணை வங்களாவடிச் சந்தி, அழகிய நகரமாக்கப்படக் கூடிய அத்தனை ஏதுக்களையும் கொண்டுள்ளது என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

தவிர, வர்த்தகக் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படக்கூடிய இடவசதிகளையும் வங்களாவடிச் சந்தி தன்னகத்தே கொண்டுள்ளது.

அந்த அடிப்படையில், வேலணை வங்களாவடிச் சந்தியில் நகர மையம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இங்கு நாம் கூறவருகின்ற விடயம்; வேலணை நகர மையத்தை அமைக்கும் போது சரியான திட்டமிடலைச் செய்து அதனை அழகிய நகர மையமாக ஆக்குங்கள் என்பது தான்.

ஆம், அமைக்கப்படும் வேலணை நகர மையம் இன்னொரு இடத்தில் நகர மையத்தை அமைப்பதற்கான முன்மாதிரியாக அமைய வேண்டும்.

அதேநேரம் சமகால சூழலுக்கேற்ப, வர்த்தகக் கட்டடத்தொகுதிகளை அமைப்பது, உரிய இடவசதிகள், வாகனத் தரிப்பிட ஏற்பாடுகள், அகபுறச் சூழலின் கவின்நிலைகள் என்பனவற்றைக் கவனத்தில் கொள்வதும் அவசியமாகும்.

இவ்வாறாக திட்டமிடப்பட்டு துறைசார் நிபுணத்துவம் உடையவர்களின் ஆலோசனைகளை உள்வாங்கி வேலணை நகர மையத்தை அமைக்க வேண்டும்.

இதற்காக வங்களாவடிப் பகுதியில் அரச மற்றும் சமய நிறுவனங்களுக்கு உரித்தாக இருக்கக்கூடிய காணிகளை உரிய பதிலீடுகளுடன் பெற்று, அதனையும் நிலஅளவுப் பிரமாணத்தில் உள்ளடக்கி வேலணை நகர மையத்தை அமையுங்கள்.

அந்த நகர மையம் மயன் அமைத்த இலங்காபுரியின் அழகுக்கு ஒப்பாக அமையட்டும்.

# இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை முன்னேற்ற முடியாது

## கலாநிதி ஜெஹான் பெரேரா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண 1956இல் இருந்து ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் முயற்சித்தார்கள். என்றாலும் அந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. என்றாலும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொண்டுள்ள இந்த அரசாங்கத்தினால் அதனை செய்ய முடியும். தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு ஒருபோதும் முன்னுக்கு செல்ல முடியாது.

அத்துடன் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் எமக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்க அரசாங்கம் முறையான நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது. (ம-3)

## நீதிமன்ற பதிவாளருக்கு தொற்று ஹட்டன் நீதவான் நீதிமன்றம் பூட்டு

(ஹட்டன்)

ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நீதிமன்றம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

ஹட்டன் - டிக்கோயா நகரசபை பொது சுகாதார பரிசோதகர்கள் இத்தகலைத் தெரிவித்தனர்.

ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு நேற்று முன்தினம் (ஜூலை-27) தொற்று உறுதியானதை அடுத்து, நேற்று மேற்கொள்ளப்பட்ட வழக்குகளை வேறொரு தினங்களுக்கு பிற்போடுமாறு நீதவான் இமேஷா பட்டபெந்திகோ உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பதிவாளர் கடந்த 22 ஆம் திகதி மன்றுக்கு வந்ததாகவும் தொற்றுக்கான அறிகுறிகள் இருப்பதை அடுத்து அவர் பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொண்ட போதே தொற்று இருப்பது உறுதியானது என ஹட்டன் டிக்கோயா பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ம-3)

## தென்மராட்சி நுணாவிலில் குழந்தை பிரசவித்த 28 நாட்களேயான தாய்க்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி - நுணாவில் பகுதியில் குழந்தை பிறந்து 28 நாட்களான நிலையில் தாய்க்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

குறித்த தாய் பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குழந்தை கிடைத்தவுடன் வீடு சென்றுள்ளார்.

பின்னர் காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அவரிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந் நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குறித்த தாய் மாற்றப்பட்டுள்ளார். (ம-3)

## பருத்தித்துறை நகர் பகுதி தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டமையால் தனிமைப்படுத்தப்பட்ட பருத்தித்துறை நகர் பகுதி இன்று தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இன்று அதிகாலை முதல் பயணத்தடை நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பருத்தித்துறை நகர் பகுதிக்கான தனிமைப்படுத்தல் தடை நீக்கப்பட்டாலும் நேற்று முன்தினம் நகர் பகுதியில் அன்டிஜன் பரிசோதனைக்கு உள்ளாகி தொற்று உறுதி செய்யப்பட்ட தொற்றாளர்கள் தமது விற்பனை நிலையங்களைத் திறக்க முடியாது.

அதேவேளை,

தொற்று உறுதியாகாதவர்கள் விற்பனை நிலையங்களைத் திறக்கமுடியும்.

இதேவேளை, அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படாதவர்களும் விற்பனை நிலையங்களைத் திறக்க முடியாது என்றும் சுகாதாரத் தரப்பினர் அறிவித்துள்ளனர். (ம-3.33)

# சத்திய தரிசனம்




## பிரமாண்ட லிங்கம்

- ❖ அவன் தேகமும் தேவனும் கலந்த கலவை- இறப்பதும் இறவாததும் சேர்ந்தது. துயரத்தை நிறுத்தி மகிழ்ச்சியைப் பெறுவதுதான் முக்தி என்றால் அது எளிது.
- ❖ உன் பாரத்தை எல்லாம் இறைவன் மீது இறக்கி விடுவதுதான் நீ செய்யவேண்டியது. அது உன்னைக் கவலையற்றவனாக, துன்பமற்றவனாக ஆக்கிவிடும்.
- ❖ அப்போது எல்லாவற்றையும் உன் அன்புக்குரிய தெய்வத்தின் லீலையாகவே எடுத்துக்கொள்வாய். எது நடந்தாலும் ஆனந்தமாகக் கை தட்டுவாய்.
- ❖ ஏனென்றால் எல்லாமே தெய்வத்தின் விளையாட்டுத்தான். அவனது திட்டங்கள் நிறைவேறுகையில் நீயும் அவ்வளவே ஆனந்தப்படுவாய்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னையில் வேகமாக பரவிவரும் சாறுவடிதல் நோயினை கட்டுப்படுத்தி தேங்காய் உற்பத்தியினை கூட்டுவோம்



திரு.ஜெ.சத்தியேந்திரன்
உதவிப்பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
பளை-யாழ்ப்பாணம்.

தென்னைப் பயிர்ச் செய்கையில் பெரிய தென்னைகளில் "சாறுவடிதல்" எனும் நோய் வேகமாகப் பரவி வருகின்றது. மக்கள் இதனைப் பார்த்து விட்டும் பிசின் தானே வடிகின்றது என அலட்சியப்படுத்துவதனால் தென்னை மரம் 9 ஆம் மாதம் இறந்து விடுகின்றது. விவசாயிகள் தென்னை மரத்தின் அடி உக்கலாக இருப்பதனையும் கண்டு, வைரப் புழுவினால் பாதிக்கப்பட்டதாக தவறாகக்கூறுகின்றனர். இதில் தென்னையின் 'வைரப் புழு' என்று ஒரு தாக்கமும் இல்லை.

மாறாக தண்டு கசிவு அல்லது சாறு வடிதல் நோயினால் ஏற்பட்ட விளைவின் பலனாக இழையங்கள் உக்கலாக சிதைவடையும் போது இரண்டாந்தரத் தொற்றாக சிறிய புழுக்கள் உருவாகின்றன. அவ்வளவுதான் எனவே, யாழ்.மாவட்டத்தில் பல இடங்களிலும் இவ்வாறான தாக்கம் ஏற்பட்டு மரம் இறப்பதனால் இந்தக் கட்டுரையினை வாசித்து விழிப்புணர்வு அடைந்து உரிய சிகிச்சை முறையினை மேற்கொள்ளவும்.

### தண்டு கசிவு நோயும் கட்டுப்படுத்தலும் (Stem bleeding Disease and its Control)


தென்னைகளுக்கு தண்டு கசிவு ஒரு பொதுவான நோயாகும். மின்னல், மேலதிகமாக உரமிடல், தீயினால் ஏற்படும் சேதம், பெரும் மழை அல்லது வெள்ளம், செவ்வண்டுத் தாக்கம் ஆகிய காரணிகளால் அடிமரத்திலிருந்து தண்டுக்கசிவு ஏற்படும். இச் சந்தர்ப்பத்தில் எல்லா தென்னை மரப்பட்டையில் நீளப்பாடான வெடிப்பு தோன்றும் "செரேற்றோசிஸ்ரிஸ் பரடொக்சா" (Ceratocystis paradoxa) என்னும் பங்கசு பலவீனம் அடைந்து இழையங்களைத் தாக்கி ஊடுருவும் பங்கசுத் தாக்கம் கசிவை அதிகரிக்கச் செய்யும்.

**அறிகுறிகள்:**

● தென்னைமரத்தின் அடியில் (தண்டில்) நீளப்பாடான வெடிப்பு தோன்றி செங்கபிலதுரு நிறமான திரவம் கசிவதே ஆரம்ப அறிகுறியாகும். இப்பகுதி கருமையாகி முடிவில் நரை கலந்த சிவப்பாக மாறும். இந்நோய் பல பகுதிகள் ஒன்று சேர்ந்து பெரிய பகுதிகளை உண்டாக்கும். நாட் செல்ல இப்பகுதியில் இருந்து திரவம் கசியாது. திரவம் கூழ்போல் தடித்து பிசின்போல் தோன்றும். கீறுகளாகக் கட்டிபடும். தொற்றல் ஏற்பட்ட பகுதியின் சிறு துண்டைக் கூரிய கத்தியினால் மேலாக வெட்டி எடுத்தால், கீழ் உள்ள நார்த்தன்மையான இழையம் கறுப்பு நிறமாகவும் உக்கியும் காணப்படும்.

● உருண்டையாக பருத்த அடிகொண்டு வீரியமாக வளரும் இளம் மரங்களில் இதே போல வெடிப்பினைக் கொண்டிருக்கலாம்.

● தீயினாலும், மின்னலினாலும் ஏற்பட்ட பாதிப்பை இலகுவில் கண்டு பிடிக்கலாம். பரிகாரத்தினைக் தொடங்கு



முன்பு மரத்தில் செவ்வண்டுத் தாக்கம் உள்ளதா? எனப்பார்ப்பது முக்கியமானதாகும். (வண்டு வெளிவரும் துவாரங்கள் அரிக்கப்பட்ட தும்பு வண்டரிக்கும் சத்தம் முதலியன அறிகுறிகள்).

● போசணைகளினதும் நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கசு உட்செல்ல வழிவகுக்கும்.

● தண்டுக் கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சை செய்யாவிடின் மரம் விரைவில் பட்டுவிடும்.

### தண்டு கசிவுக்கான ஏனைய காரணிகள்

●"கனோடேமா"(Ganodema boninians) என்ற பங்கசினால் தாக்கப்பட்ட தென்னைகளிலும் தண்டுக் கசிவு ஓர் அறிகுறியாகும். மரத்தின் அடி பகுதியில் அடைப்புக்குறி போன்ற பங்கசு இழைகள் இந்நோயின் பிரத்தியேக அறிகுறி ஆகும். இன்னோர் வகையான பங்கசு **Ganodema Lusidam** இனாலும் ஏற்படலாம்.

● போசணைகளினதும், நீரினதும் சடுதியான உள்ளெடுப்பும், மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கசு உட்செல்ல வழிவகுக்கும்.

● தண்டுக் கசிவினால் இளம் மரங்களே கூடியளவு தாக்கப்படுகின்றன. சிகிச்சையினை உடனடியாக செய்யாவிடின் மரம் விரைவில் பட்டுவிடும்.

● தண்டுக் கசிவினால் தாக்கப்பட்ட மரத்திலிருந்து குரும்பைகள் வாடி விழுவதுடன், ஓலைகள் கருகி தண்டின் அநேகமான பகுதிகள் உக்கியும் காணப்படும். இந்த நிலையில்தான் மரம் இறப்பு ஏற்படும்.

### கட்டுப்பாடு முறைகள்

● இந்நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் குணமாக்குவது சுலபம்.

● பாதிக்கப்பட்ட கரிய நிறப்பரப்புகளை அல்லது பிசின் வடிகின்ற பகுதிகளை கூரிய கத்தியினாலோ, உளி, கைக்கோடரி உதவியுடனோ ஆரோக்கியமன இளம் சிவப்பு நிற இழையங்கள் வெளிப்படும்வரை (மேற்பட்டை மட்டும்) உக்கிய கரித்தன்மையான, நார்த்தன்மையான பட்டையும் முற்றாக அகற்றப்படல் வேண்டும். இதனை உடனேயே ஓரிடத்தில் போட்டு எரித்துவிட வேண்டும். பின்பு தாக்கப்பட்ட பகுதி வெட்டப்பட்டு தொற்றல் ஏற்பட்ட இழையம் துப்புரவாக்கப்பட்டு "போடாக்ஸ்" கலவையினை (Bordeaux Mixture) தும்பினால் அல்லது பிரசினால் தாராளமாக பூச வேண்டும். போடாக்ஸ் பசையும் பாவிக்கலாம்.

● மேற்கூறப்பட்ட செயன்முறைகளுடன் மேலதிகமாக கசிவு ஏற்பட்ட இடத்திற்கு ஒரு அடிக்கு மேலாக இரண்டு அங்குல அளவு அகலத்திற்கு மரத்தில் சுற்றிவர மேற்பட்டையினை வெட்டி அகற்றிய பின்பு போடோ கலவையினை பூச வேண்டும். இதனால் பங்கசு தாக்கம் மேற்பட்டையினூடு தென்னை மரத்தின் நுனிக்கு (வட்டுப்பகுதிக்கு) செல்வதனைத் தடுக்க முடியும்.

● 10 நாட்களின் பின்பு வேறு தொற்றலோ அல்லது கசிவோ கவனிக்கப்படாத இடத்து காயங்கள் மேல் கரித்தார் அல்லது சொலிக்கணம் பூசலாம்.

● இப்படியான சில சந்தர்ப்பங்களில் கறையான்கள் துணைப்பீடைத் தாக்கத்தினையும் உண்டாக்கலாம்.

● தண்டு கசிவு மின்னலினால் ஏற்பட்டிருக்குமாயின் தண்டின் அடிப்பகுதியில் சரிவான துவாரங்களை ஏற்படுத்தி திரவங்களை வெளிப்படுத்தல் நல்ல பயனளிக்கும். பின்பு அந்த துவாரங்களை சீமெந்தினால் மூடி விடலாம்.

● கட்டுப்பாடு செய்ய முயற்சிக்கும் முன்பு தென்னைச் செய்கையாளர்கள் தண்டு கசிவிற்கான காரணத்தினை கவனமாக ஆராய்ந்து கட்டுப்பாடு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

### போடாக்ஸ் பசை (Bordeaux Paste)

2.25 லீற்றர் நீரில் 450 கிராம் செப்பு சல்பேற் (துரிசு) கரைத்து பெறப்பட்ட கரைசலுடன் 450 கிராம் சுட்ட சுண்ணாம்பு சேர்த்து கரைத்து பெற்ற பசை தான் "போடாக்ஸ் பசை" (Bordeaux Paste) ஆகும்.

### "போடாக்ஸ்" கலவை (Bordeaux Mixture) தயாரித்தல்

மட்பாண்டங்களைப் பாவித்து பின்வருமாறு கலவை தயாரிக்கவும்.

செப்புசல்பேற் (துரிசு) - 200 கிராம், நீறிய சுண்ணாம்பு-(Quicklime) 200 கிராம், நீர் - 25 லீற்றர்.

முதலில் செப்புசல்பேற்றை (துரிசு) 5 லீற்றர் தண்ணீரில் ஒரு சாக்குப் பையில் போட்டு கரைவதற்காக ஓர் இரவு முழுவதும் தொங்க விடவும். கரையும் சுண்ணாம்பினை வேறாக 20 லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியின் ஊடாக வடிக்கவும். செப்பு சல்பேற் கரைசலை சுண்ணாம்புக் கரைசலுடன் ஒன்று சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

**குறிப்பு:-**

1)கலவை தயாரிக்கப்பட்டவுடன் பாவிக்க வேண்டும்.

2) சகல பங்கசு நாசினிகளும் ஆபத்தானவை, கவனமாகப் பாவிக்க வேண்டும்.

3) வேறு செப்பு பங்கசு நாசினிகளையும் பாவிக்கலாம்.

இலங்கையில் பெருமளவு செப்பு பங்கசு நாசினிகள் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றினை போத்தலில் எழுதியுள்ள வழிகாட்டி முறையில் பாவிக்கலாம்.

**குறிப்பு:**

இந்தியாவில் தண்டு கசிவு நோய் தென்னைகளுக்கு வரு முன்பே அறிந்து கொள்ளும் உபாயமாக தென்னந்தோட்டங்களில் தென்னையினைச் சுற்றியுள்ள வட்டப் பாத்திகளில் துவரைச் செடிகளை வளர்த்து வருகின்றனர். அந்த துவரைச் செடிகளை கவனமாக கண்காணித்து வரவேண்டும்.

அந்தத் துவரைச் செடியின் தண்டுப் பகுதியிலுள்ள பட்டைகளில் பிளவு (வெடிப்பு) தோன்றினால் அந்த தென்னந் தோட்டத்தில் தென்னைகளுக்கு சாறுவடிதல் நோய் (தண்டு கசிவு நோய்) வர வாய்ப்பு உள்ளது என முன்கூட்டியே அறிந்து கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆவது திருத்தத்தை கொண்டுவரத் தயார்

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவானது சுயாதீனமான கட்டமைப்பாகக் காணப்பட்டதுடன் அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தின் ஊடாக நீதிமன்றம், பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் சமாந்தரமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் தற்போது அவை நடைமுறையில் இல்லாமையினால் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்தவர்கள் அடுத்தடுத்து விடுவிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு - எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தமது கட்சி மீண்டும் ஆட்சிபீடமேறினால் 19ஆவது திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டு ஜனநாயகத்தை வலுப்படுத்தும் திருத்தமொன்றை கொண்டுவரத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ்.பொலிஸ்...

ஜயசேகர (வயது-45) என்பவரே இவ்வாறு சடமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு கடமையை முடித்துவிட்டு, யாழ்ப்பாணம், பண்ணையிலுள்ள பொலிஸ் தங்குமிடத்திற்கு சென்று உறக்கத்திற்கு சென்றார்.

நேற்று காலையில் கடமைக்கு செல்வதற்காக காலை 5.30 மணியளவில் சக பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை தட்டியெழுப்ப முயன்றபோது, அவர் உயிரிழந்திருந்தது தெரியவந்தது.

அத்தோடு சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,33)

## 3 இலட்சத்தைக்...

துள்ளது.

இதுவரை 1,919 கொரோனா தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 301,832 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

## யாழில் 13...

பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி சங்கானை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், காரைநகர், கரவெட்டி, ஊர்காவற்துறை, கோப்பாய், மருதங்கேணி, நல்லூர், பருத்தித்துறை, தெல்லிப்பளை, உடுவில் ஆகிய சுகாதார வ்வைத்திய அதிகாரி பிரிவுகளில் கோவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதோடு, முன்களப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி போடப்படவுள்ளது. (ம-3)

## சகலரும் ஓரணி...

"பழைய அரசியல் வழிமுறைகளை முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியாது. இனவாத அரசியலை மக்கள் வெறுக்கின்றார்கள்.

உண்மையில் நாட்டின் எதிர்கால நலன் கருதி எம்மிடம் ஒரு திட்டம் இருக்கின்றது. நாம் எதிர்கால நலனை அடிப்படையாகக் கொண்டே கதைக்கின்றோம்.

நாட்டை முன்னேற்றுவதற்குரிய தீர்மானங்களை பாராளுமன்றத்துக்கு அறிவித்து, அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். (ம-3)

## யாழ்.மாவட்டத்...

ளார்.

அதன் அடிப்படையில்,

யாழ்.மாவட்டத்தில் 123 பேர், வவுனியா மாவட்டத்தில் 23 பேர், மன்னார் மாவட்டத்தில் 08 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 0'4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டில் மேலும்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,258 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 28 பெண்களும் 35 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## மன்னாரில்...

நபருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் பிசிஆர் மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழில் விபரீத...

யில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, குறித்த இள்ளஞனை பெண்கள் பிடித்து தாக்கி, முகத்தில் மிளகாய்த்தூள் வீசி, வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதால் ஏற்பட்ட அவமானத்தால் அந்த இளைஞன் தற்கொலை செய்ததாக உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த இளைஞரின் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலை ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திற்கு கையளிக்கப்பட்டப்பட்ட நிலையில் குறித்த இளைஞருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## ராஜபக்ஷவின்...

சுகாதாரப் பிரிவினர், பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் இன்று அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து விட்டனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து அராஜக ஆட்சி நடத்தும் இந்த அரசை நாட்டிலுள்ள அனைவரும் வெறுத்து விட்டார்கள். அதனால் அவர்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராடுகின்றார்கள்.

ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைகள்,

அட்டூழியங்களுக்கு எதிராக அவர்கள் கோஷம் எழுப்புகின்றார்கள். இவ்வாறான ஜனநாயகப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். இதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றோம் என்றார். (ம-3)

## நாட்டில் சில...

ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வைத்தியசாலை ஊழியர்களும் கோவிட் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளது. இவர்களில் கணிசமானோர் இரு கட்டங்களாகவும் கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

எனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது மாத்திரமின்றி அடிப்படை சுகாதார விதிமுறைகளையும் சகலரும் பின்பற்றினால் மாத்திரமே கோவிட் அச்சுறுத்தலிலிருந்து மீள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## யாழ்...

யில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த 20 பேர் உட்பட 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 45 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. உடுவிலில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 11 வயதுச் சிறுவன் ஒருவரும் உள்ளடங்குவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 2021.07.28
சீட்டிழுப்பு இலக்கம் - 549
M 20 24 61 71

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 28.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2814
X 40 53 71 78

மஹஜன சம்பத
திகதி 2021/07/28
சீட்டிழுப்பு இலக்கம் 4519
S 4 0 9 3 6 0

மெகா பவர்
திகதி 28/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0867
A 05 17 26 48 62

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 28/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1126
கன்னி 9 4 7 3 4 8

சீட்டிழுப்பு வாரம் 083
சீட்டிழுப்பு திகதி 28.07.2021
வெற்றி இலக்கங்கள்
02 20 22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,508,560/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1322
சீட்டிழுப்பு திகதி: 28.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,575,892
06 55 68 70 E

சனிதா
சீட்டிழுப்பு இல: 3657
சீட்டிழுப்பு திகதி: 28.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,055,197
வெற்றி இலக்கங்கள் 26 37 45 63 Y

சுப்பர் ஜக்பொட் 2,185,706/=
திகதி: 28.07.2021
வெற்றி வாரம்: 3208
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 07 28 43 47 கும்பம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை 9,467,560/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1496
சீட்டிழுப்பு திகதி 28/07/2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
W 17 22 37 58
அடுத்த சுப்பர் ஜக்பொட 60,746,961/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1766
சீட்டிழுப்பு திகதி 28.07.2021
வெற்றி இலக்கங்கள் 16 47 54 57 C
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 25,929,892
தொ. பே.: 0112 333 546-47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை இதுவரை ஆட்சியில் இருந்த எந்த அரசும் ஏற்படுத்தவில்லை

## நல்லாட்சி வீழ்ச்சிக்கும் இதுவே காரணம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)

**இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை இதுவரை ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் ஏற்படுத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். மேலும் நல்லாட்சியின் வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்பு - டாலி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு முன்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த நல்லாட்சி அரசின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என்பதை ஊடகங்கள் கேட்ட போது அதற்குப் பதிலளித்த அவர், தேசிய நல்லிணக்கம் பற்றியும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த 70 வருடங்களாக ஆட்சியிலிருந்த அத்தனை அரசுகளும் மேற்கொண்ட திட்டங்கள் சில வெற்றியளித்தன. சில திட்டங்கள் தோல்வியடைந்தன. ஆட்சிக்கு வந்த அரச தலைவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டனர். இருப்பினும் ஆட்சியின்போது பலவித பலவீனங்களும் ஏற்பட்டன.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் குறிப்பிட்ட அரசு ஒன்றுக்கு எதிரானதாகக் கூற முடியாது. எமது நாட்டைப் பொறுத்தவரை ஆட்சிக்கு வருகின்ற அரசுகள், 05 ஆண்டுகள் முடியும்போது தேர்தலுக்குச் செல்கின்றன. அதற்குள் 3 ஆண்டுத் திட்டங்களையே வகுக்கின்றன.

ஆனால், அபிவிருத்தியடைந்த நாடுகள் 30 ஆண்டு, 50 ஆண்டு திட்டங்கள் என வகுத்துள்ளன. நாட்டைக் கட்டியெழுப்பும் விடயத்தில் தேசிய கொள்கை மற்றும் நல்லிணக்கம் என்பன முக்கியமானதாகும்.

ஆனால், இதுவரை இருந்த அரசுகள் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டன. தேசிய கொள்கை, சுகாதாரம், சர்வதேச தொடர்பு என திட்டங்களும் நீண்ட நாட்களுக்கு அவசியமாகும். இவை இருந்தாலும் தேசிய நல்லிணக்கம் என்பது இல்லாவிட்டால் ஒன்றுமே எஞ்சியிருக்காது" என்றார்.

இதேவேளை, "அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா?" என்று ஊடகவியலாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் வினவினர்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன," தற்போது அதிகளவிலான ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் கிடைத்திருப்பதால் அவர்களுக்கு இடமளிக்கின்றேன்" என்று கூறினார். (ம-03)

# முல்லை வட்டுவாகல் கடற்படை முகாமுக்கு பொதுமக்களின் காணி அபகரிப்பு இன்று

## மக்களின் எதிர்ப்பை தடுக்க பாதுகாப்பு செயற்பாடுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் கோட்டாபய கடற்படைமுகாமுக்கு நிரந்தரமாக காணிகளை அபகரிக்கும் நோக்கோடு நில அளவை செய்யும் செயற்பாடு இன்று இடம்பெறும் என நில அளவை திணைக்களத்தால் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ள நிலையில் மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படக்கூடும் என்ற அடிப்படையில் கோட்டாபாய கடற்படை முகாம் கடற்படையினரால் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கோட்டாபாய கடற்படைமுகாமில் 617 ஏக்கர் நிலம் உள்ளடங்குகின்றது . இதில் பெரும்பாலான பகுதி பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்களாகும். ஏற்கனவே கடந்த சில வருடங்களாக நில அளவை செய்து காணியை நிரந்தரமாக சுவீகரிக்க முற்பட்ட நிலையில் பொதுமக்களின் எதிர்ப்பால் அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டிருந்த நிலையில் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் முதன் முறையாக அளவீடு செய்து சுவீகரிக்கும் பணிகள் இன்று இடம்பெறவுள்ளது . இந்த நிலையில் இந்த அளவீட்டு பணிகளுக்கு பொதுமக்களும், மக்கள் பிரதிதிகளும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டங்களை மேற்கொள்வார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கோட்டாபாய கடற்படை முகாம் கடற்படையினரால் பாதுகாப்பு கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-03)

வேலையாட்கள் தேவையா?
உங்கள் நிறுவன வேலை வாய்ப்புகளுக்கு பொருத்தமானவர்களை (இலவசமாக அல்லது கட்டணம் செலுத்தி) எம்மிடம் பெறுக்கொள்ளலாம்.
DEWMAS JOB BANK (7482)
074 138 3368

# தடையை நீக்குங்கள் 21 நாடுகளிடம் கோரிக்கை

கோவிட் பரவல் அச்சுறுத்தல் காரணமாக இலங்கைக்கு சுற்றுலாப் பிரயாணம் செய்வதற்கு தடை விதித்துள்ள 21 நாடுகளிடம் அந்த தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், மலேசியா, சிங்கப்பூர், இத்தாலி, பிலிப்பைன்ஸ், ஜேர்மன், நோர்வே, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளிடமே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ம-03)

கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம், இணுவில்
தர்மசாஸ்தா குருகுல அதிபர்
வணக்கத்திற்குரிய
சிவஸ்ரீ மஹாதேவக்குருக்கள்
அவர்களின் பாரியார்.

திருமதி
புவனாம்பிகை அம்மா
மஹாதேவக்குருக்கள்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரமடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஓம் சாந்தி -

வலம்புரி நிர்வாகம்

AGX
ஏற்றுமதியாளர்கள்
ஆகாய,கடல் மார்க்கமாக
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
கனடா 650/=
லண்டன் 975/=
(C-2386)
இல. 216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
076 443 1578

உடனடி வேலைவாய்ப்பு
K.K.S வீதி கோண்டாவிலில்
இயங்கும் பீட்சா நிறுவனத்திற்கு
Delivery boy தேவை.
சம்பளம்: நாளொன்றுக்கு 850/-
தொடர்புக்கு: (C-2432)
077 991 2628

அன்னா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2384)
070 3305500
077 888 9388
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2383)
0768226240 DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.